வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்

MARUTHI MONEY EXCHANGE

மாருதி

Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk

மலர் : 06

20.07.2025 ஞாயிற்றுக்கிழமை

இதழ் : 201


பக்கங்கள் : 16

# அதானி நிறுவனத்தின் திட்டங்களை நிறுத்தியதால் ரூ.500 மில். இழப்பீடு!

## இலங்கை அரசு செலுத்தவேண்டும்

கொழும்பு, ஜூலை 20

**அதானி நிறுவனத்தின் இரண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை நிறுத்தியமை தொடர்பில் 300 மில்லியன் முதல் 500 மில்லியன் ரூபாவை இலங்கை மீள் செலுத்தவேண்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**



விலை நிர்ணயம் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்குப் பிறகு இந்தியாவின் அதானி கிரீன் எனர்ஜி திட்டங்களிலிருந்து விலகியது.

இந்த ஆண்டு மே மாதம் திட்டத்திலிருந்து விலகுவதாக அறிவித்து திட்டத்தை செயல்படுத்துவதற்காக இங்கு ஏற்பட்ட ஆரம்பச் செலவுகளை திருப்பிச் செலுத்துமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

பின்னர், எரிசக்தி அமைச்சின் வேண்டுகோளின் பேரில், இலங்கை நிலைபேறுதகு வலு அதிகாரசபை, இந்திய நிறுவனம் கோரியபடி பணம் செலுத்த வேண்டுமா என்பது குறித்து சட்ட ஆலோசனையை நாடியது.

சில செலவுகளுக்கான திருப்பிச் செலுத்துதலுக்கான சட்ட ஆலோசனை நேற்று முன் தினம் பெறப்பட்டதாகவும், இதற்கான மொத்தத் தொகை ரூ.300 முதல் ரூ.500 மில்லியன் வரை இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எரிசக்தி அனுமதிக்கு அதானி செலுத்திய தொகையை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை என்று இலங்கை நிலைபேறுதகு வலு அதிகாரசபை உறுதியாகக் கூறுகிறது.

15

## ஜூலை 25 வரை பலத்த காற்று

கொழும்பு, ஜூலை 20

தென்மேற்கு பருவ பெயர்ச்சி அதிகரிப்பினால் நாட்டில் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகள், மேல், சப்ரகமுவ, தென், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், ஏனைய பகுதிகளில் அவ்வப்போது மணிக்கு 40 கிலோமீற்றர்

15

## அரசாங்கத்தின் மீது மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம்!

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிச்சயம், கட்டம், கட்டமாக நிறைவேற்றுவோம்.

இது தொடர்பில் அச்சம் கொள்ளவேண்டியதில்லை என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நெடுந்தீவுக்கு விஜயம் செய்த அமைச்சர், பொது அமைப்புகள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடி, அவர்களின் பிரச்னைகளை கேட்டறிந்து கொண்டார்.

15

## உள்ளக பொறிமுறை ஊடாக தமிழர்களுக்கு நீதி கிட்டாது!

### சர்வதேச விசாரணையே வேண்டும் என வலியுறுத்துகிறார் சிறிதுங்க ஜயசூரிய

கொழும்பு, ஜூலை 20

"தமிழ் மக்களுக்கு உள்ளக பொறிமுறை ஊடாக இந் நாட்டில் ஒருபோதும் நீதி கிடைக்காது. சர்வதேச விசாரணை ஊடாகவே நீதி நிலைநாட்டப்பட வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு

15

## இனப்பிரச்னைக்கான தீர்வை தவறவிட்ட சந்திரிக்கா, அநுர!

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 20

நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் அன்று சந்திரிக்காவுக்கு கிடைத்தது. இன்று அந்த சந்தர்ப்பம் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கிடைத்துள்ளது. ஆனால் அவர்கள் இருவருமே மக்களுடைய தேவைக்கு அவற்றைப் பயன்படுத்தவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1994 ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டார

15

## ஒரு வகுப்பறையில் மாணவரின் எண்ணிக்கை 25-30 ஆக மாறும்!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜூலை 20

ஒரு வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை 25-30 ஆகக் குறைப்பது ஒரு இலக்காகும் என்றும், ஒரு வகுப்பறையில் 50-60 மாணவர்களுடன் தரமான கல்வியை வழங்க முடியாது என்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு குறித்து தென் மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நோக்குடன் காலி, தக்ஷின பாய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பிரதமர் இதனைத்

15

## வேலைநிறுத்தப் போராட்டங்களை மேற்கொள்வது மிகப் பெரும் தவறு!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 20

எந்தவொரு கோரிக்கையை முன்னிட்டேனும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவது மிகப் பெரும் தவறு என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விமர்சித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேலைநிறுத்தப் போராட்டங்கள் காரணமாக இழக்கப்படும் 24 மணிநேரமோ அல்லது 48 மணிநேரமோ அதனை ஈடுசெய்ய அதன் பின்னரான ஒருவாரம் வரை கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

15

### தேசபந்து தென்னக்கோன் விவகாரம்

## விசாரணை குழுவின் அறிக்கை அடுத்த வாரம் சபாநாயகரிடம்!

கொழும்பு, ஜூலை 20

பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் விவகாரம் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை அடுத்த வாரம் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அறிக்கையை தயாரிக்கும் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசபந்து தென்னகோன் மீது சுமத்தப்பட்டுள்ள

15

## கறுப்பு ஜூலை நினைவேந்தல் புதுடில்லியில் 24 ஆம் திகதி

புதுடில்லி, ஜூலை 20

கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு இந்தியத் தலைநகர் புதுடில்லியில் எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு டில்லி அரசியல் அமைப்புக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர்களை இனமாகக் கொன்ற நாள், இலங்கை இந்துப் பண்பாட்டை அழித்தநாள் என்னும் கருப்பொருளில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொலிஸ் சேவையிலிருந்து நிலந்த ஜெயவர்த்தன நீக்கம்

கொழும்பு, ஜூலை 20

ஈஸ்டர் ஞாயிறு தின குண்டுவெடிப்புகளை அறிந்திருந்தும் மறைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அரச புலனாய்வுத் துறை தலைவர் நிலந்த ஜெயவர்த்தன பொலிஸ் சேவையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் ஆணைக்குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

அவரை பணிநீக்கம் செய்ய தொடர்புடைய உத்தரவுகளை பிறப்பிக்க பொலிஸ் ஆணைக்குழு, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள நெருக்கடிகளிலிருந்து மாணவர்களுக்கு பாதுகாப்பு

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மாணவர்களை உள நெருக்கடிகளிலிருந்து பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சி செயலமர்வு

யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், இந்தச் செயலமர்வின் நோக்கமானது பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை விளங்கி அவர்களை எவ்வாறு ஆற்றுப்படுத்துவது என்றும் அவர்களை உள நெருக்கடிகளிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பானது. மாணவர்களை உள நெருக்கடியிலிருந்து பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும்.

அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பதிலும் சூழலை ஆரோக்கியமாக பேணுவதிலும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

இந்தச் செயலமர்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் உளமருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். சிவதாஸ், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் இ. ரவிராஜ் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினார்.

இதில், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ)



# ஆரோக்கியமான வேலைச்சூழல் பற்றி உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கான ஆரோக்கியமான வேலைச் சூழல் மற்றும் உணர்வு ரீதியான விவேகம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ் விழிப்புணர்வு நிகழ்வில் கொழும்பு தேசிய மருத்துவமனை மருத்துவர் திருமதி வி. சந்திரமோகன் கலந்து கொண்டு கருத்துரைகளை நிகழ்த்தினார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), உதவி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். (எ)

# "ஸ்ராலினுக்கு கச்சதீவு காய்ச்சல் வந்துவிட்டது"

யாழ்ப்பாணம், ஜூலை 20

தமிழகத்தில் தேர்தல் வரும் போதெல்லாம் கச்சதீவு விவகாரம் காய்ச்சலாக மாறுவது வழமையான விடயம். இது குறித்து எமது மீனவ மக்கள் பதற்றமடைய மாட்டார்கள் என யாழ். மாவட்ட மீனவ அமைப்பின் பிரதிநிதி செல லத்துரை நற்குணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கச்சதீவு இலங்கைக்கு உரிய இடம். அதை தமிழகம் கேட்பது நியாயமற்றது. இதை ஏற்கனவே நாங்கள் பல தடவை வலியுறுத்தியுள்ளோம்.

தமிழகத்தில் தேர்தல் வர இருக்கின்ற நிலையில் முதலமைச்சர் மு. க. ஸ்ராலின், கச்சதீவு விவகாரத்தை பூதாகரமாக மாற்றி அரசியல் செய்ய பார்க்கிறார்.

கடந்த தேர்தலின் போதும் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலையும் தற்போதைய தமிழக முதல்வராக இருக்கின்ற மு. க. ஸ்ராலினும் கச்சதீவை மீட்கப் போகிறோம் என தமிழக மீனவ மக்களிடம் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டனர்.

அதேபோன்று இம்முறையும் கச்சதீவை இந்தியா மீள எடுப்பது தொடர்பில் மத்தியில் பேசப்போகிறோம் என தமிழக மீனவர்களை ஏமாற்றும் நாடகம் ஆரம்பமாகியுள்ளது. கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது.

கச்சதீவை நாம் பெற்றபடியால் அதேபோன்று எட்டு மடங்கு பெரிய கடற் பகுதியை இந்தியாவுக்கு வழங்கியுள்ளோம்.

ஆகவே எமது மீனவர்கள் கச்சதீவு தொடர்பில் பெரிதாக அலட்டிக் கொள்ள மாட்டார்கள். எல்லை தாண்டி எமது கடற்பகுதிக்குள் வந்தால் இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்யும்- என்றார். (எ-05)

# மண்ணில் புதைந்திருந்த எறிகணை மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 20



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு வத்திராயன் முருகன் கோவிலுக்கு அருகாமையில் நேற்று முன்தினம் வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.


குறித்த பகுதியில் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக அத்திவாரம் வெட்டிக் கொண்டிருந்தபோது மண்ணில் புதைந்திருந்த நிலையில் எறிகணை ஒன்றை கண்டுள்ளனர். இந்த நிலையில் உடனடியாக கட்டுமான வேலைகளை நிறுத்திவிட்டு சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் மாலை 05:00 மணியளவில் சம்பவ இடத்துக்கு சென்ற மருதங்கேணி பொலிஸார் குறித்த வெடிகுண்டை மீட்டு சென்றனர். இது யுத்த காலத்தில் ஏவப்பட்ட எறிகணையாக இருக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-05)

# நெடுந்தீவில் பிடிபட்ட முதலை வனஜீவராசிகள் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

நெடுந்தீவில் நேற்று முன்தினம் மாலை முதலை ஒன்று பிடிபட்டுள்ளது.

நெடுந்தீவு வெட்டுக்களிப் பகுதியை அண்மித்த இடத்தில் உள்ள நீர் முற்றாக வற்றிப்போன பாழடைந்த கிணற்றிலிருந்தே குறித்த முதலை பிடிக்கப்பட்டது.



5 அடி நீளமுடைய இந்த முதலை நெடுந்தீவு பிரதேச வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முதலையை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கடலில் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோது, பிரதேச சபை உப தவிசாளர் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து, குறித்த திணைக்களத்தின் கிளிநொச்சி அலுவலகம் ஊடாக மேலதிக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தனர். (எ-5)

# ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியாவில் மூவர் கைது

வவுனியா, ஜூலை 20

வவுனியாவில் ஐஸ் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பண்டாரிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸார் கூமாங்குளம் பகுதியில் விசேட நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 33 வயது இளைஞன் ஒருவரிடமிருந்து 3 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 31 வயது இளைஞனிடமிருந்து 266 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் யாழ்ப்பாணம், நெடுந்தீவு பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞனிடமிருந்து 230 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த மூவரும் பண்டாரிக்குளம் பொலி; ஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா போதை ஒழிப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (எ-10)

# வட்டியில்லா கடன் திட்டம் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், ஜூலை 20

அரசு சாரா உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் கற்பதற்கான வட்டியில்லாக் கடன் திட்டம் தொடர்பில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் மாணவர் கடன் பிரிவானது இலங்கையில் க.பொ.த. உயர்தரத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அரசாங்கத்தால் அரச சாரா அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பட்டப் படிப்பை தொடர வட்டி இல்லா கடன் திட்டத்தை செயல்படுத்துகின்றது.

எமது மாணவர்கள் இத் திட்டத்தில் பயன் பெறும் வகையில் அமைய வேண்டும் என்பதற்காக கொழும்பிலிருந்து வருகை தந்த கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர், பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆகியோருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றார்.

இவ் விழிப்புணர்வு நிகழ்வுக்கு கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் சந்திம ஜானகி, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சி. மகேஷ் எதிர்சிங்ஹ, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் நிர்மலி பலிவற்ற உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் கல்வியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்துக்கான விண்ணப்பங்களை www.studentloan.mohe.gov.lk என்ற இணையத்தளம் மூலம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் ஏனைய விவரங்களையும் அறிந்து கொள்ள முடியும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவ் விழிப்புணர்வு தெளிவூட்டலில் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட பிரதேச திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவிகள் கர்ப்பமடைவது அதிகரிப்பு

## மகளிர் விவகார அமைச்சர் சரோஜா

கொழும்பு, ஜூலை 20
நாட்டில் சமீப காலமாக பாடசாலை மாணவிகளி டையே கர்ப்பம் தரிப்பது அதி கரித்து வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவிகளின் கர்ப்ப வீதமும் பாடசாலை மாணவிகளாக இருக்கும் தாய் மார்களின் எண்ணிக்கையும் அதி கரித்து வருவதாகவும் அமைச் சர் கவலை வெளியிட்டார்.

இதற்கு தீர்வாக, கல்வி அமைச்சுடன் இணைந்து, இளம் பருவப் பெண்கள் மற் றும் பாடசாலை மாணவர்க ளுக்கு பாலியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு குறித்த சிறந்த புரிதலை வழங்குவதற்கு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

"18 வயதுக்குட்பட்ட மாண விகளின் கர்ப்பங்கள், அவர் களைப் பாதிக்கப்பட்டவர்க ளாக மாற்றுவதுடன், பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றன. இதனால், பெற்றோரின் கவ னிப்பு இல்லாமல், எதிர்காலத் தில் சமூகத்தில் கைவிடப்பட்ட அல்லது அநாதையாக்கப்பட்ட குழந்தைகளின் பிறப்பு ஏற் படுகிறது. இதைத் தடுக்க அர சாங்கமாக நாங்கள் செயல் பட்டு வருகிறோம். கல்வி அமைச்சுடன் இணைந்து, இளம் பருவப் பெண்கள் மற் றும் பாடசாலை மாணவர்க ளுக்கு பாலியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு குறித்த தெளி வான புரிதலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த பிறகு, அதற்கான முழுப் பொறுப்பு ஒரு பெண்ணின் மீது மட்டும் விழுவதில்லை. அநாதையாகவோ அல்லது கைவிடப்பட்டவர்களாகவோ சமூகத்தில் விடப்படும் குழந் தைகள், சமூக களங்கத்தையும் பாவத்தையும் சாபத்தையும் சுமக்க நேரிடுகிறது. எனவே, உறவு வைத்திருக்கலாம், ஆனால் பொறுப்பான குடும்ப உறவு இல்லாமல் குழந்தை பெறுவது சாத்தியமில்லை என்றால், கர்ப்பத்தைத் தடுக்க அறிவியல் முறைகளைப் பின் பற்ற வேண்டும். கரு உருவான பிறகு அதை அழிப்பது குற்ற வியல் கொலையாகும். ஆகவே, குழந்தைகளை அநாதைகளா கவோ அல்லது சமூகத்தால் கைவிடப்பட்டவர்களாகவோ ஆக்காமல், பொறுப்புடன் செயல்பட வேண்டும்."- என்றார். (எ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகாபாரதம் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 20
தொண்டைமானாறு செல் வச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேர வையால் வாராந்தம் வெள்ளிக் கிழமைகளில் நடத்தப்படுகின்ற நிகழ்வில் நேற்று முன்தினம் ஆசிரியர், செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேலின் மகா பாரத தொடர் சொற்பொழிவு நடைபெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம முதல் வர் கலாநிதி மோகனதாஸ் சுவா மிகள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருகோண மலை உதயபுரி செல்வநாயக புரத்தில் 24 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்துக்கொடுக் கப்பட்ட கற்பக விநாயகர் அறநெறி பாடசாலை மற்றும் 21 இலட்சம் ரூபாய் செலவில் அவ்விடத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்துக்குமார சுவாமி திருக்கோவில் கட்டடம் அமைக்க உதவி யதற்காக அந்த நிர்வாகிகள் மோகனதாஸ் சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தியும், நினைவுக் கேடயம் வழங்கியும் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடிய வர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர் வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ- 02)

# மருத்துவமனைக்கு தேவையான மருந்துகளுக்கு பணம் ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை 20
மருத்துவமனைகளில் ஏதே னும் மருந்துத் தட்டுப்பாடு ஏற் படும் சமயத்திலும் மருந்து விநியோகப் பிரிவால் மருந்து கள் வழங்கப்படாத சந்தர்ப்பங் களிலும் பிரதேச கொள்முத லுக்கு அமைய மருந்துகளைப் பெற அனைத்து மருத்துவ மனைகளுக்கும் தேவையான பணம் சுகாதார அமைச்சால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இலஞ்ச ஊழல் விசா ரணைப் பிரிவினர் மேற்கொண்டு வரும் விசாரணையுடன் இதை குழப்பிக்கொள்ளத் தேவை யில்லை என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பொலநறுவை தேசிய சிறுநீரக மருத்துவமனைக்கு சென்ற அமைச்சர், மருத்துவ மனை நிர்வாகிகள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரை யாடலில் ஈடுபட்டபோதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

இந்த சிறுநீரக மருத்து வமனை சீனாவின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் எமக்கு வழங் கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் மருத்துவமனையின் செயல்பாடுகள் மற்றும் பராம ரிப்பு நடவடிக்கைகளை முறை யாக செயல்படுத்துவது தொடர் பில் விசேட கவனம் செலுத்தப் படும். தற்போது மருத்துவ மனையில் உருவாகியுள்ள நெருக் கடிகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவதில் எவ்வித பிரயோ சனமும் இல்லை. அதற்கான முறையான திட்டமிடல் அவசி யம் - என்றார். (எ)

# தென்மேற்கு பருவமழை தீவிரம்: பல மாகாணங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 20
தென்மேற்கு பருவமழையின் தாக்கம் தீவிரமாகும் காரணத் தால் மேற்கு, சப்ரகமுவ, மத் திய, தெற்கு, வடமேற்கு மற் றும் வடமத்திய மாகாணங் களில் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நாட்டின் பிற பகுதிகளிலும் மணிக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வேகத் தில் காற்று வீச வாய்ப்பு உள்ள தாகவும் அறிவிக்கப்பட்டுள் ளது. (எ)

# ஞாயிறு, போயா தினங்களில் தனியார் வகுப்பு நடத்த தடை

## மட்டக்களப்பு மாநகரசபையில் 13 பிரேரணைகள் நிறைவேற்றம்

மட்டக்களப்பு, ஜூலை 20
மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஞாயிறு மற்றும் போயா தினங் களில் தனியார் வகுப்புகள் நடத்தத் தடை விதிப்பு மற்றும் விளம்பர பலகைகளில் தமிழ் மொழி கட்டாயம், கட்டாக் காலி மாடுகள், நாய்களை கட் டுப்படுத்தல் உட்பட 9 பிரேர ணைகள் மாநகர சபை அமர் வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரண்டாவது சபை அமர்வு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் சபா மண்டபத்தில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன. (எ)

# நாடு பூராகவும் திடீர் சோதனை 1,461 பேர் கைது

கொழும்பு, ஜூலை 20
நாடு முழுவதும் நடத்தப் பட்ட விசேட சோதனை நடவ டிக்கையில் 1461 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரன்மல் கொடிதுவக்குவின் வழிகாட் டுதலின் கீழ் 14000இற்கும் மேற்பட்ட படையினரைக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, 46 வாகனங் கள் மற்றும் 51 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த நடவடிக்கையில், குற் றங்களில் நேரடியாக பங்கேற்ற 107 நபர்களும் இராணுவத்திலி ருந்து தப்பியோடிய 7 நபர்க ளும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் ஹெரோயின், ஐஸ், கஞ்சா மற்றும் சட்டவிரோத மதுபானங்கள் உள்ளிட்ட பொருட்களும் இந்தச் சோத னையின்போது பறிமுதல் செய்

# 80 வயது மூதாட்டியின் மரண தண்டனை ரத்து

கொழும்பு, ஜூலை 20
அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றத்தால் 80 வயது மூதாட்டி ஒருவருக்கு விதிக்கப் பட்ட மரண தண்டனையை மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் இரத்து செய் துள்ளது.

1993ஆம் ஆண்டு இடம் பெற்ற கொலை வழக்கு தொடர்பில் சட்டமா அதிபர் அம்பாந்தோட்டை மேல் நீதி மன்றத்தில் பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தி ருந்தார்.

இவ்வழக்கு விசாரணையின் முடிவில், 2023ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை மேல் நீதி மன்றம் அவருக்கு மரண தண் டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக மூதாட்டி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவைப் பரிசீலித்த மேல்முறையீட்டு நீதிமன்றம், பிரதிவாதிக்கு எதிராக வழங் கப்பட்ட சாட்சியங்களில் முரண்பாடுகள் இருப்பதாகவும், அவை தெளிவற்றவையாக உள்ளதாக சுட்டிக்காட்டியது.

இதன்படி, மரண தண்ட னையை உறுதிப்படுத்த போது மான ஆதாரங்கள் இல்லாத தால், மேல்முறையீட்டு நீதிமன் றம் இந்தத் தீர்ப்பை இரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

# தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு: மோட்டார் சைக்கிள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 20
தெஹிவளை ரயில் நிலையத் துக்கு அருகில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டில் பயன்படுத் தப்பட்ட மோட்டார் சைக்கிள், பிலியந்தலை மாற்று வீதியில் உள்ள கோவில் ஒன்றுக்கு முன் பாக சிவப்பு நிற பாதுகாப்பு தலைக்கவசத்துடன் கைவிடப் பட்ட நிலையில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 01:30 மணியளவில் பொலிஸ் விசேட படையின் புலனாய்வு அதிகாரி ஒருவர் மோட்டார் சைக்கிளைக் கண்டு, மூத்த பொலிஸ் அதிகாரிக்கு தகவல் அளித்ததாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் இணைக்கப்பட்டிருந்த இலக் கத் தகடு ஒரு காருக்கு பதிவு செய்யப்பட்டது என விசார ணையில் தெரியவந்துள்ளது.

கொழும்பு குற்றத் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் சம்பவ இடத்துக்கு சென்று மேலதிக விசாரணை களை மேற்கொண்டார்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் வெள்ளவத்தையைச் சேர்ந்த 46 வயது சுதத் குமார் காயம டைந்தார். அவரது நிலை கவலைக்கிடமாக இல்லை என களுபோவில மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சி.சி. ரிவி காட்சிகளின்படி, துப்பாக்கிச் சூடு நடத்தியவர் எந்த இடையூறும் இல்லாமல் நடந்து சென்று, காரின் சாரதி இருக்கையில் இருந்த சுதத் குமார் மீது நான்கு முறை துப்பாக்கியால் சுட்டார்.

இதில் இரண்டு குண்டுகள் அவரது தோள்பட்டை மற்றும் வயிற்றில் பட்டன. மற்றவை காரைத் தாக்கின. தாக்குதலுக் குப் பிறகு, துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மற்றொரு நபரு டன் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றார்.

சம்பவ இடத்திற்கு வந்த ஒருவர், காயமடைந்த சுதத் குமாரை அதே காரில் ஏற்றி களுபோவில மருத்துவமனை யில் அனுமதித்தார். சுதத் குமார் நாளாந்த கடன் வழங்கு பவர் எனவும், அவர் மீது இது வரை எந்த குற்றச்சாட்டும் பதிவாகவில்லை எனவும், யாரா லும் அச்சுறுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் தெரி வித்த னர்.

விசாரணையில் சுதத் குமார், "வெலே சுதா" என்று அழைக் கப்படும் போதைப்பொருள் கடத்தல்காரரின் உறவுமுறை பெண்ணை திருமணம் செய்து சமீபத்தில் விவாகரத்து செய்த வர் எனத் தெரியவந்துள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.07.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆடி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கேள்வி, எதிரணியின் பலவீனம் பற்றியது அல்ல

தங்களுடைய அரசாங்கத்தை வீழ்த்துமளவிற்கு உறுதியான எதிரணி இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கின்றார். அவர் கூறுவது உண்மைதான் - இலங்கையில் ஒரு பலமான எதிரணி இல்லை. அண்மைக் காலத்தில் அவ்வாறானதொரு எதிரணி உருவாகுவதற்கான வாய்ப்பும் தென்படவில்லை. அதற்கான அசைவை தென்னிலங்கையில் காண முடியவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் விஜித ஹேரத் கூறுவது போன்று அண்மைக்காலத்தில் அரசாங்கத்திற்கு சவால்கள் ஏற்படப் போவதில்லை. அதற்காக சவால்களே ஏற்படாது என்றும் இல்லை. ஜனநாயக அரசியலில் அனைத்து அரசாங்கங்களுமே ஒரு கட்டத்தில் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும். தேசிய மக்கள் சக்திக்கும் அது நிச்சயம் ஏற்படும். ஆனால், இங்கு கவனிக்க வேண்டிய விடயம் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் எதனை மக்களுக்கு விட்டுச் செல்கின்றனர் என்பதுதான்.

இலங்கையை இதுவரையில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் அனைத்துக்கும் இடையில் ஓர் ஒற்றுமையுண்டு அதாவது, அவைகள் அனைத்துமே பாரம்பரிய கட்சிகள். அவற்றுக்கு இடையில் கட்சிக் கொடியில் வேறுபாடுகள் இருந்ததே தவிர அவர்களின் அரசியல் அணுகுமுறைகளில், சிந்தனைகளில் பெரியளவில் வேறுபாடுகள் இருக்கவில்லை.

குறிப்பாக இலங்கையின் தேசிய இனப்பிரச்னையை கையாளுவதில், அதற்கான ஒரு நிரந்தர தீர்வை காண்பதில் அனைத்து ஆட்சியாளர்களுமே மேலாதிக்க மனோபாவத்துடனும் இனவாத சிந்தனையுடனுமே இயங்கினர். இதன் காரணமாகத்தான் பிரச்னை தீர்வின்றி தொடர்ந்தது - யுத்தம் ஏற்பட்டது, நாடு சிதைவுற்றது. இந்த அடிப்படையில் நோக்கினால் கடந்த காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களுமே நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லவில்லை - அதற்கு மாறாக அவ்வப்போது எழுந்த பிரச்னைகளுக்கு தற்காலிக ஓட்டுப் போட்டவர்களாகவே இருந்தனர்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி பாரம்பரிய அரசியல் கட்சி அல்ல - பாரம்பரிய கட்சிகளிடமிருந்து அதிகாரத்தை பறிப்பதற்காக ஆயுதமேந்திப் போராடிய இயக்கம் ஒன்றின் ஜனநாயக முகம். பாரம்பரிய கட்சிகள் நாட்டை வழிநடத்தத் தவறிவிட்டன என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்களை நிராகரிக்குமாறு தொடர்ந்தும் சிங்கள மக்களிடம் கோரி வந்த ஒரு கட்சி.

அவ்வாறானதொரு கட்சி வரலாற்றில் முதல் முறையாக அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றது. இப்போது அந்தக் கட்சி என்ன செய்யப் போகின்றது என்பதுதான் கேள்வி. தங்களை வீழ்த்துமளவுக்கு தென்னில்ங்கையில் எதிரணி பலமாக இல்லை என்பது ஒரு சாதனையல்ல. மாறாக எதிரணிகள் பலவீனமாக இருக்கின்ற சூழலில், தங்களிடமுள்ள அரிய பெரும்பான்மை அதிகாரத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகின்றீர்கள் என்பதுதான் கேள்வி. இதுவரையில் தீர்க்கப்படாத - முன்னைய அரசாங்கங்கள் கண்டுகொள்ளாத அரசியல் பிரச்னைகளை நீங்கள் எப்படித் தீர்க்கப் போகின்றீர்கள்?

# சுவாமி விபுலானந்தரின் துறவற நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 20

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், அகில இலங்கை இந்து மாமன்றம், யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியன இணைந்து இந்த துறவற நூற்றாண்டு விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கலந்து கொண்டதுடன் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், சி. சிறீபவானந்தராஜா, யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன், பிரதேச செயலர்கள், செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து பண்பாட்டு ஊர்வலத்துடனும் தமிழர்களின் வீர விளையாட்டான சிலம்பாட்டத்துடனும் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். இதன்போது சுவாமி விபுலானந்தரின் உருவப்படங்கள் தாங்கிவரப்பட்டதுடன் சுவாமியின் வேடம் தாங்கி மாணவர்களின் ஊர்திப்பவனியும் நடைபெற்றது.

விபுலானந்தரின் துறவற நூற்றாண்டை முன்னிட்டு நினைவு முத்திரையும் தபால் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

விபுலானந்த அடிகளார் என்ற நூலும் வெளியிடப்பட்டதுடன் நினைவுப் பரிசும்







விருந்தினர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன. கலை கலாசார நிகழ்வுகள் விழாவை அலங்கரித்தன. (எ-05)

# ஆயுர்வேத மூலிகைப் பண்ணையை பார்வையிட்டார் வடமாகாண ஆளுநர்

கிளிநொச்சி, ஜூலை 20

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் உள்ள, வடக்கு மாகான சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆயுர்வேத மூலிகை பண்ணை மற்றும் கிராமிய சித்த மருத்துவமனை ஆகியவற்றை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று பார்வையிட்டார்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் சென்ற ஆளுநர், தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

கல்மடுக்குளம் மற்றும் யுத்தகாலத்தில் சேதமடைந்து, இன்று வரை இயங்காத நிலையில் உள்ள பாரிய அரிசி ஆலையையும் சென்று பார்வையிட்ட ஆளுநர், மீள இயக்குவது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இந்த விஜயத்தில், கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன்,

இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர் கைலாசபிள்ளை பிரகாஷ், கண்டவளை பிரதேச செயலாளர் த.பிருதாகரன் மற்றும் என பலர் இணைந்து கொண்டனர். (அ)

# உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பினால் உதவி வழங்கல்


யாழ்ப்பாணம், ஜூலை 20

உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பினால், பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கிய, முழங்காலில் 19 ஆம் கட்டை பல்லவராயன் கட்டு கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் 5 பேருக்கு, புலம்பெயர் நண்பர்களின் நிதி உதவியுடன் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

நேற்று மாலை 3.00 மணியளவில், உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பினர் உதவியை வழங்கினர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் சொல்லும் மரபு!

வெ. இன்சுவை



வாழ்க்கை என்றால் மேடு, பள்ளங்கள் இருக்கும் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். அதுபோல நல்லவர்களும், தீயவர்களும் சேர்ந்ததுதான் இந்த உலகம். மனிதர்களில் எல்லோருமே புத்தர்களாக, உத்தமர்களாக, நீதிவான்களாக, தர்ம சிந்தனை உடையவர்களாக, அறவழியில் நடப்பவர்களாக, சத்தியத்தைத் தாங்கிப்பிடிப்பவர்களாக, சமுதாய அக்கறை கொண்டவர்களாக இருப்பதில்லை.

தராசுத் தட்டுக்களைப் போல சமமாக இருக்க முடியாது. சமூக ஊடகச் செய்திகளைப் பார்க்கும்போது, எங்கு பார்த்தாலும் அடாத செயல்கள் நடப்பது போலவும், எல்லோரும் காமக் கொடூரர்களாகவும், ரத்தவெறி பிடித்து அலைபவர்வர்களாகவும் தெரிகிறார்கள். நமக்கும் மனிதகுலத்தின் மீது இருந்த நம்பிக்கை தளர்ந்து வருகிறது. நம்முடன் பழகும் அனைவரும் ஆதாயத்துக்காகவும், உள்நோக்கத்துடனும்தான் பழகுகிறார்கள் என்று தப்புக்கணக்கு போட்டு விடுகிறோம்.

நாம் ஒருவருடனும் உள்ளன்புடன் பழகாமல் தனித் தனி தீவுகளாக வாழ்கிறோம். நல்லவர்கள் நிறைய இருக்கிறார்கள். மனசு முழுக்க கருணையையும், அன்பையும் நிரப்பிக் கொண்டு எல்லோருக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள். சமுதாய நலனுக்காக, பொருள் நிறைந்தவர் பணத்தையும், அல்லாதவர் உடல் உழைப்பையும் நல்குகிறார்கள். பால் நினைந்தூட்டும் தாயைப்போல பரிவு காட்டுகிறார்கள்.

எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் உற்றுழி உதவுகிறார்கள் நட்பெனும் நந்தவனத்தை உருவாக்குகிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கான அர்த்தத்தை உணர்ந்து கொண்டவர்கள். பெரிய உதவி என்று இல்லை. ஒரு சிறுஉதவி கூட ஒருவரின் கண்ணீரைத் துடைக்கும் வாட்டத்தைப் போக்கும் பட்ட மரம் துளிர்ப்பதுபோல் அவர்களின் நம்பிக்கை துளிர்விடும்.

பசுமையைப் பார்த்தால் கண்ணுக்குக் குளிர்ச்சி என்பதைப்போல, பலர் செய்யும் நல்ல செயல்களைப் பார்க்கும் போது மனசுக்குள் பன்னீர் தெளித்ததைப்போல இருக்கிறது. இறுகிய பாறை நெகிழ்வது போல இதயம் நெகிழ்கிறது. சட்டென வாழ்வு இனிமையாகிறது.

பிறருக்கு உதவி செய்யும்போது, அது தரும் ஆனந்தம் எல்லையற்றது. நெஞ்சு இளைத்தவர்தமைக் கண்டு இளைப்பவர் பலர் தான் உண்ட நீரைத் தலையாலே தான் தரும் தென்னைபோல, தான் சமுதாயத்தால் வாழ்வளிக்கப்பட்டதை உணர்ந்து, சமுதாயத்துக்குத் தொண்டு செய்பவர் பலர். அடுத்தவர் துயர் கண்டு கலங்காத கண்கள், அடுத்தவருக்கு உதவாத கைகள், உதவி செய்ய ஓடாத கால்கள் எல்லாம் வீணே. நாம் காட்டும் சின்னச் சின்ன அன்பில் குளிர்ந்து போகின்றன பல உள்ளங்கள். உதவி பெறுபவர்களின் முகமலர்ச்சி நம் வாழ்க்கையில் ஒளி ஏற்றும்.

ஒரு காணொலி என் மனதில் பதிந்துவிட்டது. ஓர் இளைஞன் ஒரு வீட்டுக்கு உணவு கொண்டு வருகிறான். அந்த வீட்டின் அழைப்பு மணியை அடிக்கிறான். அந்த வீட்டுப் பெண் கதவைத் திறந்து வாசலுக்கு வருகிறாள். அவனிடமிருந்து உணவுப் பையை வாங்குகிறாள். அதில் சிறிது உணவு சிந்தி உள்ளது. பையனைத் திட்டுகிறார். அவன் கை கூப்பி மன்னிப்பு கேட்கிறான். அவள் கோபப்பட்டு, அந்தப் பையைத் தெருவில் வீசிவிட்டு உள்ளே போய்விடுகிறாள்.

இளைஞன்அந்த இடத்தை சுத்தம் செய்யும் போது, வாசலில் அந்தப் பெண்ணின் நகை கீழே கிடைப்பதைப் பார்க்கிறான். உடனே அதை எடுத்துக்கொண்டு, அழைப்பு மணியை அடிக்கிறான். வெளியே வந்த அந்தப் பெண் அந்த இளைஞனை அதிகம் திட்டுகிறாள். அவனோ மௌனமாக அந்த நகையை அவளிடம் கொடுக்கிறான். தன் கழுத்தைத் தொட்டுப் பார்த்த அவள் திடுக்கிட்டு அதைப் பெற்றுக் கொள்கிறாள்.

அவள் தன் செயலுக்கு மிகவும் வருந்தி அவனுக்கு நன்றி கூறிவிட்டு, இறைந்து கிடந்த உணவுச் சிதறல்களை எடுத்து தூய்மை செய்கிறாள். இளைஞன் சென்றுவிட்டான். அவள் திட்டியதற்காக அந்த இளைஞன் அந்த நகையை எடுத்துச் சென்று இருக்கலாம். அது திருட்டு அல்ல. அவனின் நேர்மை நிச்சயமாக அவனை வாழ்க்கையில் வெற்றிபெற வைக்கும். (14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 20.07.2025 - 26.07.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - ஆடி 04
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : ஏகாதசி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு கிடைக்கும். காரியத் தடைகள், சுறுசுறுப்பு இல்லாத நிலை உருவாகும். பக்தி, ஞானம் மேலிடும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் தங்கள் புகழும் மரியாதையும் கூடும். பயணத்தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல நண்பர்கள் மற்றும் உறவினர் அனுசரணை இருக்கும். அரசு வகை இலாபங்கள் ஏற்படும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டங்கள் ஏற்பட்டு, வியாபாரம் சூடுபிடிக்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு உண்டு. வெளியூர் அலைச்சல்கள் அதிகரிக்கும். ஞானிகளின், பெரியவர்கள் சந்திப்பால் மன அமைதியும், சந்தோஷமும் பெருகும். சிலருக்கு எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமும், குஷியாக வும் இருக்கும். தங்கள் கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப் பங்கள் குறையும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமைகளை வெளிக் காட்டுவதன் மூலம் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நல்ல சேதிகள் நாடிவரும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான தகவல்கள் வந்து சேரும். வாரத்தின், முதல் நாள் பயணத்தில் துன்ப மும், பின்னர் வரும் நாட்களில் கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். வாழ்க்ை இரண்டையும் சமமாக பாவித்தல் துன்பமும் இன்பமாகும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் எதிர்பாராத இனிய விருந்துகள், மகிழ்ச்சி கொண்டாட்டங்கள் ஏற்படும். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். அரசாங்கத்திடம் வேண்டப்பட்ட கோரிக்கைகள் தடங்கலின்றி நிறைவேறும். நல்லோர் சேர்க்கையால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல தேர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் சிலர் மேன்மை அடைவீர்கள்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் இரண்டும் கலந்த வாரம். ஞானிகளின் உபதேசம் கேட்டு மனம் ஞானத் தன்மைக்கு மாறும். அரசுப் பெண் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீண் கோபத்தால் விவேகத்தை இழக்காதீர்கள். தங்கள் சிறப்பான, திறமை மிக்க பணி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டும் பெறும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மனதில் அமைதியும் நிலவும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிறப்பான காலம். அதன் காரணமாக வங்கி சேமிப்புக் கணக்குகளில் இருக்கும் கையிருப்பு பணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை ஈடுபாடு இலாபம் பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமை தியும், நிம்மதியும் நிலவும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். சிலருக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து சேரும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரை வில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். ஏமாற்றத்தை தவிர்க்க எச்சரிக்கையாக இருப்பது நல் லது. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம் ஏற்படும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பொன் ஆபரணங்கள் விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். பக்தி மிக்க புண்ணிய தல யாத்திரைகள் ஏற்படும். மேம்படும் பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடுவதால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பூமி, வீடு ஆகியவற்றின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் பணவரவு அதிகரிக்கும். புதிய முதலீட்டுத் திட்டங்களில் உங்கள் பணத்தை முதலீடு செய்து தொழிலை விருத்தி செய்வார்கள். விருந்தினர்கள் வருவர். விருந்தாடி மகிழ்வைத் தருவர். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். பயணங்கள் இனிமை தரும். சினிமா, டிராமா எனப் பொழுது போக்குகளில் குடும்பத்தோடு ஈடுபட்டு மகிழ்வீர்கள். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்காது.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் குடும்பத்தில் கலகங்களும், குழப்பங்களும் நிகழலாம். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லையே. அதே போல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. பல நாள் கனவுகள் நனவாகும். பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. சிலருக்குப் பிறர் பொல்லாப்பு காரணமாக பயம் தோன்றலாம். நேர்மை, கடின உழைப்பு ஆகியவற்றால், நல்ல முன்னேற்றம் கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு மாகாண ஆட்சி முறையின் அவசியத்தை உணர்த்தும் முயற்சியில் வரதராஜப்பெருமாள்



வீரகத்தி தனபாலசிங்கம்

உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகள் கணிசமானளவுக்கு வீழ்ச்சியடைந்ததை தொடர்ந்து மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கம் அவசரம் காட்டப் போவதில்லை என்று பரவலான ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது.

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை மாகாணசபைகள் முறை தொடர்ந்து இருக்கும் என்று கூறும் அரசாங்க தலைவர்கள் அதுவரைக்குமாவது மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளினால் மாகாணசபைகள் நிருவகிக்கப்படுவதற்கு வகைசெய்வதில் அக்கறை காட்டுவதாக இல்லை.

மாகாணசபைகள் முறை இலங்கை மீது இந்தியாவினால் திணிக்கப்பட்டது என்பதே பொதுவில் தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தின் குறிப்பாக சிங்கள தேசியவாத சக்திகளின் நிலைப்பாடாக இருந்து வருகிறது. 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை தொடர்ந்து அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறையை அன்றைய அரசாங்கம் உண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரமே நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், தமிழர்களுக்கு பிரத்தியேகமாக எதையும் வழங்கவில்லை என்று சிங்கள மக்களுக்கு காட்டுவதற்காக இலங்கை அரசாங்கம் நாடு முழுவதும் மாகாண சபைகளை அமைத்தது.

தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வாக அதிகாரப்பரவலாக்கத்தை கோரிய வடக்கு, கிழக்கு மக்களுக்கு மாத்திரம் மாகாண சபைகளை வழங்காமல் தென்னிலங்கையிலும் மாகாண சபைகளை நடைமுறைப்படுத்தியதன் மூலம் சிங்கள மக்கள் மீது உண்மையில் அவற்றை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவே திணித்தார்.

மாகாண சபைகள் முறை 37 வருடங்களாக நடைமுறையில் இருந்து வருகின்ற போதிலும், கடந்த எட்டு வருடங்களாக தேர்தல்கள் நடத்தப்படாமல் மாகாண நிருவாகங்கள் ஆளுநர்களின் கீழ் இயங்குவது குறித்து தென்னிலங்கை அரசியல் கட்சிகளோ அல்லது மக்களோ எந்த விதமான எதிர்ப்பையும் வெளிப்படுத்தவில்லை.

ஆனால், மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்பட்டு மாகாணங்களின் நிருவாகங்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று தென்னிலங்கையில் அடிக்கடி வலியுறுத்துபவராக முன்னாள் பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய விளங்குகிறார்.

கட்சி அரசியலில் இருந்து விலகிய ஜெயசூரியவின் தலைமையில் தற்போது இயங்கிவரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மாகாணசபை தேர்தல்களை அரசாங்கம் விரைவில் நடத்த வேண்டும் என்று கடந்த வாரமும் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது.

அரசின் ஏனைய சகல பிரதிநிதித்துவ நிறுவனங்களும் இயங்கிவருகின்ற ஒரு நேரத்தில், மாகாண சபைகளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்தும் வைத்திருப்பது அரசியலமைப்பை மீறுகின்ற ஒரு செயல் மாத்திரமல்ல, தங்களது பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் மக்களுக்கு இருக்கும் உரிமையை மீறுவதாகவும் அமைகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் 2018 ஆம் ஆண்டுக்கு பிறகு எந்தவொரு மாகாண சபையிலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை என்று கூறியிருக்கிறது. இறுதியாக மாகாண சபை தேர்தல்கள் 2014 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டன.


'ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் ஊடாக மாகாணசபைகள் நிருவகிக்கப்படுவதன் மூலமாக அவை அதிகாரத்துவ கட்டுப்பாட்டு நிறுவனங்களாக மாற்றப்பட்டுவிட்டன. அது ஜனநாயக விரோதமானதும் ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும். இந்த நிலைவரம் குறித்து ஜனநாயகத்தை மதிப்பவர்கள் சகலரும் அக்கறை செலுத்த வேண்டும்.

'அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தியினால் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கை விளக்க அறிக்கையின் பிரகாரம் சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் அடுத்த நான்கு மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டுமானால், தேர்தல்களை நடத்துவதற்கு தடையாக இருக்கும் பிரச்சினைகளை அரசாங்கம் உடனடியாகக் கையாளவேண்டும்.

'தொடர்ச்சியான தாமதம் மக்களின் குறிப்பாக, தேசியப் பிரச்சினைகளுக்கு நீதியானதும் நிலைபேறானதுமான தீர்வு காணப்பட வேண்டும் என்று கோருபவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு விரோதமாக அமைகிறது. தற்போதைய மாகாண சபை முறையில் உள்ள குறைபாடுகளையும் விமர்சனங்களையும் பரிசீலனைக்கு எடுக்க வேண்டியது முக்கியமானது என்ற போதிலும், அதை தேர்தல்களை பின்போடுவதற்கான ஒரு சாட்டாக பயன்படுத்தக் கூடாது.

'இந்த பிரச்சினைகளை கையாளுவதற்கு ஏற்கெனவே மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியான யோசனைகளை சமர்ப்பித்திருக்கிறார்கள். தேவையானால், முறைமையை மீளாய்வு செய்வதற்கும் சிபாரிசுகளைச் செய்வதற்கும் ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார். ஆனால், இந்த செயன்முறைகளில் எந்த ஒன்றுமே தங்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான மக்களின் உரிமையை தாமதிக்கக்கூடாது" என்று சமூகநீதிக்கான தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் சுனில் ஜெயசேகர அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

சமூகநீதிக்கான தேசிய இயக்கத்தைப் போன்று தேசிய சமாதானப் பேரவையும் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்தவேண்டும் என்று அரசாங்கத்தை அடிக்கடி வலியுறுத்திவருகிறது. மாகாணசபைகள் மக்கள் பிரதிநிதிகளினால் ஒழுங்கான முறையில் நிருவகிக்கப்படுவதற்கு பெரும் இடையூறாக விளங்கும் ஆளுநரின் மட்டுமீறிய அதிகாரங்களை குறைக்கும் சாத்தியம் குறித்து ஆராய்வதற்கு அரசாங்கம் அமைச்சரவை உபகுழுவை நியமிக்க வேண்டும் என்று கூட சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா கோரிக்கை விடுத்தார். பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யும் சாத்தியம் குறித்து ஆராய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அவரிடமிருந்து இந்த கோரிக்கை வந்தது.



**தென்னிலங்கை மக்களை பொறுத்தவரை, மாகாணசபைகள் இயங்கினால்தான் அவர்களது தேவைகள் நிறைவேற்றப்படும் என்றில்லை. மத்திய அரசாங்கமே ஏழு மாகாணங்களிலும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும். ஆனால், வடக்கு, கிழக்கு மக்களை பொறுத்தவரை, மாகாண ஆட்சிமுறை அவர்களிடம் இருந்தால் மாத்திரமே ஓரளவுக்கேனும் மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாகவும் பிராந்தியத்தில் இடம்பெறுகின்ற அத்துமீறல்களை தடுக்கக்கூடியதாகவும் இருக்கும்.**

ஆனால், பெரும்பாலான தமிழ்க் கட்சிகளிடம் இருந்து மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை வருவதில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்திய பிரதமரை அல்லது இந்திய இராஜதந்திரிகளை சந்திக்கின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்று அவர்களை கேட்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் அவற்றைப் பற்றி அவர்கள் பேசுவதில்லை.

விடுதலை புலிகள் 13 வது திருத்தத்தை எதிர்த்த காரணத்தினால், அந்த இயக்கத்தின் மீதான தங்களின் விசுவாசத்தை இன்னமும் வெளிக்காட்டும் ஒரு அறிகுறியாக மாகாணசபைகள் மற்றும் 13 வது திருத்தம் பற்றி பேசுவதை சில தமிழ் அரசியல்வாதிகள் தவிர்த்து வருகிறார்கள். ஆனால், மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் பட்சத்தில் அவர்களின் கட்சிகள் நிச்சயம் போட்டியிடும்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த 16 வருடங்களாக பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த காலப் போராட்டங்களின் தியாகங்களின் நினைவுகளுடன் மக்களை பிணைத்து வைத்திருப்பதற்காக வெறுமனே உணர்ச்சிவசமான சுலோகங்களை எழுப்புவதை தவிர வேறு எந்தவிதமான நடைமுறைச் சாத்தியமான பாதையையும் காட்ட முடியாதவர்களாக இருந்து வருகிறார்கள்.

அவர்களது கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகள் மீது வெறுப்படைந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தென்னிலங்கை கட்சியொன்றுக்கு இதுகாலவரையில் அளித்திராத ஆதரவை ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கினார்கள். தங்களுக்கு தமிழ் மக்கள் ஒரு பாடத்தை புகட்ட விரும்பியதை விளங்கிக் கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் அண்மைய உள்ளூராட்சி தேர்தல்களில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் எதிராக ஆவேசமான பிரசாரங்களை முன்னெடுத்தார்கள்.

பாராளுமன்ற தேர்தலில் தங்களுக்கு பெருமளவில் வாக்களித்த தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் உணர்வுகளையும் உகந்த முறையில் விளங்கிக் கொண்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்பட்டிருந்தால், உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ்க் கட்சிகள் அவற்றின் செல்வாக்கை மீட்டெடுக்க முடியாமல் போயிருக்கும். ஆனால், தேசிய இனப்பிரச்சினை உட்பட போருக்கு பின்னரான தமிழ் மக்களின் பிரச்சினைகள் விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்களை விடவும் வேறுபட்ட முறையில் செயற்படுவதில் தங்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதை உணர்த்தக்கூடியதாக அரசாங்கம் நடந்து கொள்ளவில்லை.

உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்களின்போது தமிழர்களின் ஐக்கியம் பற்றியும் மக்களின் நலன்கள் பற்றியும் உரத்துப் பேசிய தமிழ்க் கட்சிகள் அண்மைக்காலமாக உள்ளூராட்சி நிருவாகங்களை அமைப்பதில் எந்தளவுக்கு சந்தர்ப்பவாத அணுகுமுறைகளை கடைப்பிடித்தன என்பதை நாம் எல்லோரும் கண்டோம்.

தமிழ்ப்பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி சபைகள் கடந்த சில நாட்களாக நிறைவேற்றிவரும் தீர்மானங்கள் மீண்டும் நடைமுறைச் சாத்தியமற்றதும் வெறுமனே மக்களின் உணர்ச்சிகளை தூண்டுகின்றதுமான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலேயே தமிழ்க் கட்சிகள் அக்கறை காட்டுகின்றன என்பதை அம்பலப்படுத்துகிறது.

முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான முதலாவது வடமாகாணசபை எத்தகைய நூற்றுக்கணக்கான தீர்மானங்களை நிறைவேற்றுவதில் காலத்தைச் செலவிட்டது என்பதையும் அதனால் மாகாணசபைக்கு இருக்கக்கூடிய குறைந்தட்ச அதிகாரங்களை யாவது பயன்படுத்தி மக்களுக்கு உருப்படியான எந்த சேவையையும் செய்யமுடியாமல் போனது என்பதையும் நன்றாக தெரிந்து கொண்ட பின்னரும் கூட தமிழ்ப்பகுதிகளின் புதிய உள்ளூராட்சி சபைகள் அதே பிரயோசனமில்லாத பாதையில் செல்லத் தொடங்கியிருக்கின்றன.

இத்தகைய பின்புலத்தில், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப்பெருமாள் மாகாண ஆட்சிமுறையை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடப் போவதாக வெளியிட்டிருக்கும் அறிவிப்பு கவனத்துக்கு உரியதாகிறது.

தேர்தல் அரசியலில் ஈடுபடுவதற்காகவோ அல்லது மீண்டும் பதவிகளை பெறுவதற்காகவோ இந்த முயற்சியில் இறங்கவில்லை என்று கூறும் பெருமாள் தமிழ் கட்சிகளையும் சகல மட்டங்களிலும் இருக்கக்கூடிய தமிழ்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஈஸ்டர் உண்மை தொடக்கமாக அமையமுடியும்



கலாநிதி ஜெகான் பெரேரா

**ஆறு வருடங்களாக திருப்திகரமான முடிவைக் காணமுடியாமல் இருக்கும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் போன்ற ஒரு குற்றச்செயல் வெற்றிகரமான முறையில் விசாரணை செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படுமானால், போர்க் காலப்பகுதி உட்பட கடந்த காலத்தை ஆழமாக துருவி ஆராய்வதற்கான வெளி திறக்கப்படக்கூடும்.**





2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு இலங்கை அரசியலுடன் ஒரு உறவுமுறை இருக்கிறது என்ற ஊகம் நீண்டகாலமாகவே இருந்துவருகிறது. மூன்று கிறிஸ்தவ தேவாலயங்களிலும் மூன்று ஆடம்பர ஹோட்டல்களிலும் முஸ்லிம் தற்கொலைக் குண்டுதாரிகளினால் அனேகமாக ஏககாலத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 270பேர் பலியானதுடன் 500 க்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகினர். இரு மதங்களுக்கு இடையிலான முரண்நிலை வரலாற்றை இலங்கை கொண்டிருக்கவில்லை என்பதால் அந்த குண்டுத் தாக்குதல்களை புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அந்த படுமோசமான குற்றச்செயல்களினால் பயனடைந்திருக்கக் கூடியவர்கள் யாராக இருக்கும் என்ற அடிப்படையில் அரசியல் நோக்கம் ஒன்று குறித்து சந்தேகிக்கப்பட்டது.

குண்டுத்தாக்குதல்களை தொடர்ந்து அன்று பதவியில் இருந்த அரசாங்கத்துக்கு பெரும் அபகீர்த்தி ஏற்பட்டது. எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்பட்டார். சில மாதங்களில் நடைபெற்ற தேசிய தேர்தலில் அரசாங்கம் படுதோல்வியடைந்தது.

அன்று இடம்பெற்ற அரசாங்க மாற்றத்துக்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட அரசியல் தந்திரோபாயம் ஒன்றை சபை முதல்வர் பிமால் இரத்நாயக்க கடந்தவாரம் பாராளுமன்றத்தில் வெளியிட்டார். அந்த குண்டுத் தாக்குதல்கள் வெறுமனே ஒரு புலனாய்வுத் தோல்வியல்ல, அரசியலில் இருந்தவர்களினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சியின் விளைவாகவே அவை இடம்பெற்றன என்ற சந்தேகத்துடன் பொருந்தியதாக அவரது கருத்துக்கள் இருந்தன.

அரசாங்க உயர்மட்டத்தினால் தெளிவாகவும் உத்தியோகபூர்வமாகவும் இப்போது கூறப்படுவதே அந்த சந்தேகத்தைப் பொறுத்தவரை, புதிய விடயமாகும். "புலனாய்வு அமைப்புகளின் ஊடாக சிங்கள தீவிரவாதக் குழுக்களையும் முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களையும் தோற்றுவித்து பேணியதன் மூலமாக 2013 ஆம் ஆண்டில் அவர்கள் இதை ஆரம்பித்தார்கள். அதன் முடிவு கேம்பிரிட்ஜ் அனாலிட்டிக்கா சம்பவத்தை ஒத்ததாக இருந்தது" என்று அமைச்சர் பிமால் இரத்நாயக்க கூறினார்.

கேம்பிரிட்ஜ் அனாலிட்டிக்கா கம்பனி ஊழல் என்பது அரசியல் நோக்கங்களுக்காக வாக்காளர்களை இலக்குவைத்து உளவியல் சுயவிபரங்களை சேகரிப்பதற்கு முகநூலைப் பயன்படுத்தும் இலட்சக்கணக்கானவர்களின் தனிப்பட்ட தரவுகளை அதிகாரமற்ற முறையில் பெறுவதுடன் சம்பந்தப்பட்டதாகும். கேம்பிரிட்ஜ் அனாலிட்டிக்காவினால் பெறப்பட்ட தரவுகள் முக்கியமாக டொனால்ட் ட்ரம்புக்கு அனுகூலமான முறையில் 2016 அமெரிக்க தேர்தலிலிலும் ஐக்கிய இராச்சியத்தில் 2016 பிரெக்சிட் சர்வஜனவாக்கெடுப்பிலும் செல்வாக்கு செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டன. அந்த கம்பனி வாக்காளர்களின் நடத்தைகளை சூழ்ச்சித்தனமாக மாற்றியமைப்பதற்கு உளவியல் சுயவிபரங்களையும் டிஜிட்டல் விளம்பரங்களையும் பயன்படுத்தி கென்யா, நைஜீரியா, இந்தியா, டிரினிடாட் அன்ட் ரொபாகோ மற்றும் பல்வேறு நாடுகளின் தேர்தல்களிலும் செயற்பட்டது.

ஈஸ்டர் தாக்குதல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் உண்மை என்று நிரூபிக்கப்படுமானால், அவை இலங்கையில் போரின் முடிவுக்கு பின்னரான காலப் பகுதியில் அரசியல் நோக்கங்களுக்காக வன்முறை பயன்படுத்தப்பட்ட மிகவும் மோசமான - நெறிமுறைகெட்ட உதாரணங்களாக அமையும். அரசியல் அதிகாரத்துக்கு மீண்டும் வருவதற்கு வழிவகுப்பதற்கு பீதியையும் மரணத்தையும் அழிவையும் பயன்படுத்துவது என்பது அறவே ஏற்றுக்கொள்ள முடியாததும் மனச்சாட்சியே இல்லாத காரியமுமாகும்.

அத்தகைய ஏற்றுக் கொள்ளமுடியாத செயற்பாடுகளை கையாளுவதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளில் இருந்து தற்போதைய தருணத்தை வேறுபட்டதாகக் காட்டுவது அரசியல் துணிவாற்றல் இருப்பது போன்ற தோற்றப்பாடேயாகும். விளைவுகளோ அல்லது தாக்கங்களோ அதிகாரத்தின் உயர் மட்டங்களை எட்டுவதாக இருந்தால் கூட, விசாரணைகளை தொடருவதில் தற்போதைய அரசாங்கம் பற்றுறுதி கொண்டிருக்கிறது என்ற உணர்வு காணப்படுகிறது.

ஓய்வுபெற்ற அதிகாரிகளான ஷானி அபேசேகரவையும் ரவி செனவிரத்னவையும் மீண்டும் நியமிப்பதற்கு அரசாங்கம் எடுத்த சர்ச்சைக்குரிய நடவடிக்கை முக்கியமாகக் கவனிக்கக்கூடியதாகும். அந்த இரு உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளும் முன்னைய அரசாங்கங்களினால் விசாரணை செயற்பாடுகளில் இருந்து நீக்கப்பட்டவர்கள். இப்போது அவர்கள் மீண்டும் விசாரணைகளை முன்னெடுக்கப் போகிறார்கள்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களின் இறுதிக்கட்டங்களில் அரசாங்கத் தரப்பின் அரசியல் மேடைகளில் ஏறியதன் மூலம் அவர்கள் இருவரும் சர்ச்சைக்குரியவர்களாக நோக்கப்பட்டார்கள். கார்டினல் மல்கம் ரஞ்சித் விடுத்த வேண்டுகோளைக் காரணம் காட்டி அவர்கள் இருவரும் மீண்டும் நியமிக்கப்பட்டதை அமைச்சர் பிமால் இரத்நாயக்க நியாயப்படுத்தினார். இந்த பின்புலத்திலேயே, நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கத்தின் அக்கறை குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தின் நம்பிக்கையை பெறுகிறது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்பட வேண்டும் என்று நிலையுறுதியாக வலியுறுத்துவதில் கத்தோலிக்க திருச்சபையும் கார்டினல் மல்கம் ரஞ்சித்தும் வகித்துவரும் பாத்திரம் மெச்சத்தக்கது. குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று ஆரம்பத்தில் இருந்தே கார்டினல் குரல் கொடுத்துவருகிறார். வெளிப்படைத் தன்மையையும் நம்பகத்தன்மை கொண்ட விசாரணையையும் கோருவதிலும் குண்டுத் தாக்குதல்களுக்கு உண்மையில் பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதிலும் கார்டினல் எந்த விதமான தடுமாற்றமும் இன்றி தொடர்ச்சியாக உறுதியாக இருந்து வருகிறார்.

கார்டினலின் இந்த நெருக்குதல் காரணமாக பல வருடங்களாக முன்னைய அரசாங்கங்களின் தலைவர்கள் குண்டுத் தாக்குதல்களின் குற்றவாளிகளையும் சூத்திரதாரிகளையும் கண்டுபிடிப்பதாக உறுதியளித்தார்கள். அதை கார்டினலும் வரவேற்றார். ஆனால், முன்னைய பல உறுதிமொழிகளைப் போன்றே அந்த உறுதிமொழிகள் நடைமுறையில் எந்த உருப்படியான பயனையும் தரவில்லை.

பொருளாதாரக் குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வைப்பதற்கான நடவடிக்கைகளில் ஏற்கெனவே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும் ஒரு நேரத்தில், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றத்தை காணக்கூடியதாக இருக்கிறது. முன்னர் பலம் பொருந்தியவர்களாக இருந்த அரசியல்வாதிகள் ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது முன்னர் ஒருபோதுமே நாம் கண்டிராத நிலைவரமாகும். அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் இருப்பவர்கள் குற்றச் செயல்களுக்காக தண்டனையை அனுபவிக்காமல் இருந்துவந்த நடைமுறை பல தசாப்தங்களாக நீடித்து வந்தது.

பொருளாதாரக் குற்றங்களிலும் அரசியல் வன்முறையிலும் ஈடுபடுபட்டதாக சந்தேகிக்கப்படுபவர்கள் அரசாங்கத் தரப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராக அரைமனதுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவந்த ஒரு போக்கை கடந்த காலத்தில் கண்டோம். குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டது, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள், ஆனால் நடவடிக்கைகள் இடைநடுவில் கைவிடப்பட்டு சந்தேகநபர்கள் பெரும்பாலும் விடுதலை செய்யப்படடார்கள். ஆனால், தற்போது குற்றஞ்சாட்டப்படுபவர்களுக்கு எதிரான வழக்குகள் நீதிமன்றங்களில் துரிதமாக விசாரணை செய்யப்பட்டு முன்னுதாரணமான தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.


ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை பொறுத்தவரை, உயிர்தப்பியவர்களின் சாட்சியங்களும் புலனாய்வுத் தவறுகள் தொடர்பிலான விபரங்களும் தற்போது வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. பிள்ளையான் போன்று முன்னர் துணை இராணுவக் குழுவினராக இருந்து அரசியல்வாதிகளாக மாறியவர்கள் உட்பட முக்கியமான சந்தேகநபர்கள் தொடர்பிலான விசாரணைகள் ஈஸ்டர் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன்னிறுத்தும் நடவடிக்கைகள் இனிமேலும் பெயரளவிலானவையாக இருக்கப்போவதில்லை என்பதை காட்டுகின்றன.

இந்த விவகாரத்தில் தற்போது காணப்படுகின்ற உத்வேகம் தணிந்து போகாமல் இருப்பதை உறுதிசெய்வது அரசாங்கத்துக்கு ஒரு சவாலாக இருக்கப் போகிறது. சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்புக்கள் தலையீடுகளின்றி இயங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டியது அவசியமாகும். எந்தளவுக்குத்தான் அரசியல் ரீதியில் உணர்ச்சிபூர்வமானதாக இருந்தாலும், இலங்கை மக்களுக்கு பதில்கள் முக்கியமாக நீதி தேவைப்படுகிறது.

தண்டனையின்மை கலாசாரம் ஒன்றினால் இலங்கை பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த கலாசாரம் அவநம்பிக்கையையும் வெறுப்பு மனப்பான்மையையும் வளர்த்திருக்கிறது. அந்தப் போக்கை மாற்றியமைப்பதற்கு தற்போதைய அரசாங்கம் மிகவும் முன்கூட்டியே நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதனால் முழுமையான நீதி கிடைப்பதற்கு வழிபிறக்குமா என்பதை இப்போதே கூறிவிடமுடியாது.

முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயங்களை பொறுத்தவரை அரசாங்கத்திடம் ஒரு நிரல் ஒழுங்கு இருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.


(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் ஜனாதிபதி அநுர அவர்களே!

பனங்காட்டான்



# காலம் எவருக்காகவும் காத்திருக்காது!!

**காலம் ஒருபோதும் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. அது எமக்கானதாக அமையும்போது அதனைச் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தவறவிட்டால் பதவிக் கதிரை முக்காலியாகி, ஒன்பதோடு பத்தாகிவிடும். காலமும் காலமாகிப் போகும்.**

தோழர் ஜனாதிபதி அநுர குமர திஸ்ஸநாயக்க அவர்களுக்கு,

கடந்த வாரம் எழுதிய கடிதத்தின் இரண்டாம் பகுதியாக இது அமைகிறது. கடந்த வாரம் எழுதத் தொடங்கியபோது எழுத எழுத விடயங்கள் தொடராக வந்தன (செம்மணி புதைகுழியிலிருந்து உடலங்கள் வந்ததுபோல). இக்கடிதம் மூன்றாம் பகுதிக்குச் செல்லக்கூடாது என்று நினைத்தவாறு தொடருகிறேன்.

செம்மணி புதைகுழிகளே இக்கடிதத்தின் மூல அம்சம். பொழிப்பாகச் சொல்வதானால் அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்திலிருந்து மீட்கப்படும் அப்பாவி தமிழர்களின் எலும்புக் கூடுகள். நீதிபதி ஒருவரதும், மருத்துவ நிபுணர் ஒருவரதும் மேற்பார்வையில் இவை மீட்கப்படுகின்றன. யுனிசெஃப் அடையாளம் பொறிக்கப்பட்ட பாடசாலைப் பையுடன் காணப்பட்ட எலும்புக்கூடு நான்கு - ஐந்து வயதுக்குட்பட்ட பிஞ்சுப் பெண் குழந்தையுடையது என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட அகழ்வு இந்த மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இன்னும் எத்தனை எத்தனை எலும்புக்கூடுகள் (இப்படி எழுத மனம் விரும்பவில்லை. இவை எமது காணாமற்போன உறவுகளின் எஞ்சிய உடற்பாகங்கள்) மீட்கப்படப் போகின்றனவோ என்ற ஏக்கத்துடன் ஒவ்வொருவரும் இருப்பதை நீங்கள் நிச்சயம் உணருவீர்களென நாம் நம்புகிறோம்.

இவ்வாறு நான் குறிப்பிடுவதற்கு நியாயமான காரணம் உண்டு. தேர்தல் காலத்தில் உங்களது உரையொன்றில் உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட இரண்டு இழப்புகளை குறிப்பிட்டிருந்தீர்கள். உங்கள் சகோதரர் ஒருவர் காணாமலாக்கப்பட்டதாகவும், அவரது உடல் இதுவரை மீட்கப்படவில்லையென்றும் சொல்லியிருந்தீர்கள். உங்கள் தந்தையின் மரணச் சடங்கில் நீங்கள் பங்குபற்ற முடியாது போனதையும் கூறியிருந்தீர்கள். தலைமறைவாகியிருந்த உங்களை கைது செய்வதற்காக சீருடை அணிந்த படையினர் உங்கள் தந்தையின் இறுதிச் சடங்கு நாட்களில் அவ்விடத்தை சுற்றி வளைத்திருந்ததால் நீங்கள் பங்குபற்ற முடியாது போனதை கூறியிருந்தீர்கள். இதை உங்கள் தாயாரும் ஊடகம் ஒன்றில் தெரிவித்திருந்தார். (இதே அனுபவம் இதனை எழுதுபவனுக்கும் 1989 மே மாத இறுதியில் ஏற்பட்டது). இதனால் உங்கள் மனவேதனையை என்னால் உளமார உணர முடிகிறது.

மீண்டும் விடயத்துக்கு வருவோம். செம்மணி புதைகுழி சம்பந்தமாக நீங்கள் எவ்வளவுக்கு அறிந்து வைத்திருக்கிறீர்கள்? இவ்விடயங்கள் தொடர்பாக தினசரி சரியான தகவல்கள் உங்களுக்குப் பகிரப்படுகிறதா? அனேகமாக அவ்வப்போது உண்மைத் தகவல்கள் உங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்காது என்றே நம்புகிறேன். உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்ல முடியும்.

1972ல் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் முடிசூடா ராணியாக ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க, 1977 தேர்தலில் படுதோல்வி கண்டு எதிர்கட்சித் தலைவராகவே முடியாது போனார். தமக்கான தோல்வியின் காரணத்தை இந்திய ஊடக செவ்வி ஒன்றில் விளக்கிய சிறிமாவோ, தம்மைச் சுற்றியிருந்த முக்கியஸ்தர்கள் நாட்டு நடப்பை முழுமையாக மறைத்து உண்மைக்குப் புறம்பான, தவறான தகவல்களை தமக்குத் தந்து வழி நடத்தியதால், மக்கள் பிரச்சனைகளை தாம் அறிந்திருக்காது போனதே படுதோல்விக்குக் காரணமென மனம் திறந்து கூறியிருந்தார்.

ஜனாதிபதி, பிரதமர் போன்ற உயர் பதவிகளில் இருப்பவர்களுக்கு இந்தத் துரதிர்ஸ்ட நிலை ஏற்படுவது வழக்கம். இவர்களைச் சுற்றியிருப்பவர்கள் தங்கள் சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், பதவிகளை தக்க வைக்கவும் இவ்வாறுதான் நடந்து கொள்வார்கள். நீங்களும் இந்த வலைப்பின்னலில் சிக்கி விடக்கூடாது என்பதற்காகவே இதனை இங்கு சுட்டுகிறேன். தயவு செய்து சகல பத்திரிகைகளையும், முக்கியமாக உங்கள் ஆட்சியை விமர்சிக்கும் ஊடகங்களை தவறாது படியுங்கள்.

நீங்களும் உங்கள் ஜே.வி.பி.யும் இதற்கு முன்னர் நாட்டை ஆளும் வாய்ப்பைப் பெற்றிராததால் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு கிழக்கு மனித புதைகுழிகள் விவகாரம், தமிழர் வழிபாட்டுத் தல விவகாரங்கள் தொடர்பாக ஆழமாக அறிந்திருக்க முடியாது போயிருக்கலாம். இதனால் இவ்விடயங்களில் உங்கள் மீது விரல் நீட்டி குற்றஞ்சுமத்த முடியாது. இதனால் நீதியானதும், நேர்மையானதுமான விசாரணைகளை சர்வதேச ஆதரவோடு நடத்தி உண்மையைக் கண்டறியும் வாய்ப்பு உங்களுக்குத் தரப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இரண்டு முக்கியமான நிகழ்வுகள் கொழும்பில் இடம்பெற்றன. முதலாவது ஜனாதிபதி அலுவலகம் முன்னாலும், அடுத்தது கோட்டை புகையிரதம் முன்னாலும் இடம்பெற்றது. தங்கள் காணிகளை மீட்பவர்களின் போராட்டம் முதலாவதாகவும், புதைகுழிகள் தொடர்பானது இரண்டாவதாகவும் இடம்பெற்றது. இந்த அமைதிப் போராட்டத்தை முன்னேற விடாது காவற்படையினர் வழக்கம்போல தடுத்து நிறுத்தினர். மூன்று மாதங்கள் அறகலய போராட்டம் நடத்திய உங்களை எதுவும் செய்ய முடியாது போன காவற்படை அமைதிப் போராட்டம் நடத்திய மக்களை தடுத்து நிறுத்தியுள்ளதை நீங்கள் அறிவீர்களா?

1971 ஏப்ரல் காலத்திலும், 1987-1989 காலங்களிலும் களனி கங்கையிலும் காலு கங்கையிலும் மிதந்து வந்த உடலங்கள், வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் வீசப்பட்டுக் கிடந்த தலையில்லாத முண்டங்கள், மக்கள் நடமாட்டம் உள்ள பாதைகளில் கழுத்துகளில் டயர் போடப்பட்டு அரைகுறையாக எரியுண்டு கிடந்த உடலங்கள் யாருடையவை? அனைத்தும் உங்கள் தோழர்களுடையவை. அரச பயங்கரவாதம் நடத்திய படுகொலைகள் இவை என்பதை இங்கு எழுதித்தான் உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றில்லை. இவைகளை நினைவில் நிறுத்திப் பார்த்தால் தமிழர் பகுதிப் புதைகுழி அவலங்களை உங்களால் உய்த்துணர முடியும்.

செம்மணிக்கு அநுர அரசாங்கமே நீதியை நிலைநாட்டும் என்று தமிழர் விவகார அமைச்சராகக் காட்சி கொடுக்கும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்துள்ளார். வடக்கின் புதைகுழிகள் தொடர்பில் விரைவில் உண்மைகள் வெளிவரும் என்று நீதியமைச்சர் ஹர்சண நாணயக்கார கூறியுள்ளார். கடந்த ஈஸ்டர் சண்டே நினைவு நாளின்போது அந்தத் தாக்குதல் சூத்திரதாரி யாரென்பதை அறிவிப்போம் என்று நீங்கள் வழங்கிய உறுதிமொழி காற்றோடு காற்றாகிப் போனது போலத்தான் இவையும் போகுமா?

நீங்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்று இன்னமும் ஒரு வருடம் ஆகவில்லை. உங்கள் கட்சியின் நாடாளுமன்ற ஆட்சி உருவாகி இப்போதுதான் எட்டு மாதங்கள் முடிவடைந்துள்ளன. தேர்தல் கால உங்கள் பரப்புரைகள் மீதான நம்பிக்கை காரணமாகவும், தமிழ் மக்களை வழிநடத்த நம்பகமான தலைமை இல்லாமையாலும் வடக்கிலும் கிழக்கிலும் சில பிரதிநிதிகளை தமிழர் வாக்குகளால் பெற்றீர்கள். இருப்பினும் உங்கள் தாய்க்கட்சி ஜே.வி.பி.யினது கடந்த கால கசப்பான அனுபவங்கள் ஐஞ்சறைப் பெட்டிக்குள் இன்னமும் இருப்பதை நீங்கள் அறிய வேண்டும். இவற்றுள் ஒன்றிரண்டு முக்கியமானவை.

நடிகரும் அரசியல்வாதியுமான விஜய குமாரதுங்கவின் கொலைச் சம்பவம் தொடர்பில் ஜே.வி.பி. மீது குற்றம் சுமத்தப்பட்டது. 1996ல் இவர் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசியிருந்தார். 1998 பெப்ரவரியில் கொல்லப்பட்டது தொடர்பாக சந்தேகத்தில் கைதான ஜே.வி.பி.யினர் இருவர் காணாமலாக்கப்பட்டனர்.

விஜய குமாரதுங்கவின் மனைவியான சந்திரிகா தலைமையில் உங்கள் கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக 2004ல் இணைந்து 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றீர்கள். அவ்வேளை உங்கள் அணிக்குக் கிடைத்த பதவிகளில் ஒன்றான விவசாயம், காணி, நீர்ப்பாசனம், கால்நடை ஆகியவற்றின் அமைச்சராக நீங்கள் நியமனம் பெற்றீர்கள். 2005 யூன் 16ம் திகதி நீங்கள் 39 பேரும் சந்திரிகா ஆட்சியிலிருந்து வெளியேறினீர்கள். அமைச்சர் பதவிகளையும் துறந்தீர்கள். ஏன்?

சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பு வடக்குக்கும் தெற்குக்கும் பொதுவானதாக இருந்ததால், சுனாமி நிவாரணப் பணிகளை சந்திரிகா அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து (PTOMS) மேற்கொள்ள எடுக்கப்பட்ட முடிவை எதிர்த்தே வெளியேறினீர்கள். ஞாபகம் இருக்கிறதுதானே!

அடுத்தது, ஜே.ஆர். - ராஜீவ் இலங்கை இந்திய ஒப்பந்தம். இதில் இடம்பெற்ற 13ம் திருத்தத்தின்படி வடக்கிலும் கிழக்கிலும் இணைந்த மாகாண சபை முறைமை ஏற்கப்பட்டிருந்தது. இதனை நிரந்தரமாக்க கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும். ஆனால் இவ்விடயம் அரசியலமைப்புக்கு முரணானது என்று சுட்டி உயர்நீதிமன்றத்தில் உங்களின் ஜே.வி.பி. வழக்குத் தாக்கல் செய்தது. சந்திரிகாவின் கைப்பொம்மையாக இயங்கிய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா உங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்து வடக்கு கிழக்கு இணைப்பை இல்லாமலாக்கினார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் ஏற்றிருக்கவில்லையென்பது உங்கள் தரப்புக்கு நன்கு தெரியும். பாதிக்கப்பட்ட மக்கள் நலன் கருதியே அரசாங்கத்துடன் இணைந்து சுனாமி நிவாரணப் பணியை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் இணங்கினர். இதன் அர்த்தம் சந்திரிகா அரசுடன் சேர்ந்து ஆட்சியில் பங்கேற்பதல்ல என்பதும் உங்களுக்குத் தெரியும். அப்படியிருந்தும் இவ்விரு விடயங்களிலும் நீங்கள் முன்னெடுத்த செயற்பாடுகள் தமிழ் மக்களையே பாதித்தன என்றுதான் கூற வேண்டும். இருந்தும் உங்கள் தலைமையில் தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் நீங்கள் மறுபிறப்பு எடுத்தபோது தமிழர்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதன் பலாபலன்களை நாடாளுமன்ற, உள்ளூராட்சித் தேர்தல்களில் நீங்கள் சுவைத்தீர்கள்.

தமிழின அழிப்பில் ஈடுபட்டு அரச பயங்கரவாதத்தை மேலோக்கிய படைத்துறை அதிகாரிகள் இப்போது சுதந்திர வீரர்களாக பொது நிகழ்ச்சிகளில் காட்சி தருகிறார்கள். போர்க்கால குற்றங்களை மறைக்க போர் அனுபவங்கள் என்ற பெயரில் நூல்களை வெளியிடுகிறார்கள். இன்றும் தமிழர் காணிகள் படைகள் வசம் உள்ளன. தமிழர்களின் வழிபாட்டுத் தலங்கள் அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ளன. .....இவ்வாறு பெரும் பட்டியலைத் தர முடியும்.

கடந்த கால நம்பிக்கையீனங்களின் மத்தியிலும், உங்கள் மீதான சிறு நம்பிக்கையின் பேரில் ஏதாவது நிவாரணம் கிடைக்குமென நம்பி இவைகளை இங்கு பதிவிட நேர்ந்துள்ளது.

காலம் ஒருபோதும் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. அது எமக்கானதாக அமையும்போது அதனைச் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தவறவிட்டால் பதவிக் கதிரை முக்காலியாகி, ஒன்பதோடு பத்தாகிவிடும். காலமும் காலமாகிப் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் ஒரு கூட்டணித் தகராறு!


பாரதிய ஜனதா கட்சிக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையிலான உறவுகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கடந்த ஏப்ரில் மாதம் அறிவித்த போதிலும், இரு கட்சிகளும் அவற்றுக்கிடையிலான முரண்பாடுகளை மறைப்பதற்கு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.


"எடப்பாடிஜியின் தலைமையில் நாம் தேர்தலில் போட்டியிடுவோம் " என்று அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமியுடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் அமித் ஷா கூறினார். வெற்றி கிடைக்கும் பட்சத்தில் - கூட்டரசாங்கம்" ஒன்று அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். அந்த அறிவிப்புக்கு சாதகமான முறையில் அண்ணா தி.மு.க. பதிலளித்திருக்கவில்லை. அண்ணா தி.மு.க. மாத்திரமல்ல, ஆளும் திராவிட முன்னேற்றக் கழகமும் கூட தமிழ்நாட்டில் கூட்டரசாங்கம் என்ற யோசனைக்கு எப்போதுமே எதிராகவே இருந்து வந்திருக்கின்றன.

1980 சட்டசபை தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அதிகாரத்தைக் கைப்பற்றத் தவறியது. அந்த கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் சம எண்ணிக்கையிலான ஆசனங்களிலேயே போட்டியிட்டன. தி.மு.க.வுடன் ஒரு சுற்று இழுபறிக்கு பிறகு அதன் தலைவர் மு. கருணாநிதியை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிலைப்படுத்துவதற்கு காங்கிரஸ் இறுதியாக இணங்கியது. ஆனால், அந்த கூட்டணி தேர்தலில் மக்களின் ஆதரவைப் பெற்று வெற்றியடையவில்லை. பதிலாக, அந்த வருடம் ஏற்கெனவே நடைபெற்ற லோக்சபா தேர்தலில் இரு ஆசனங்களில் மாத்திரமே வெற்றி பெற்று பிறகு தமிழ் நாட்டில் ஆட்சியதிகாரத்தையும் இழந்த அண்ணா தி.மு.க.வே சட்டசபை தேர்தலில் பெருவெற்றி பெற்றது.

2001 சட்டசபை தேர்தலில் அண்ணா தி.மு.க. 141 ஆசனங்களில் போட்டியிட்டபோது (முன்னென்றும் இல்லாத வகையில் அந்த கட்சி குறைந்தளவு ஆசனங்களில் போட்டியிட்ட சந்தர்ப்பம் அதுவே ) கூட்டணி நிர்ப்பந்தங்களின் பின்புலத்தில் அந்த கட்சியினால் தனியாக சாதாரண பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றக் கூடியதாக இருக்குமா என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது. ஆனால், 234 ஆசனங்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டசபையில் அண்ணா தி.மு.க. 118 ஆசனங்களை கைப்பற்ற வேண்டியிருந்தது. அண்ணா தி.மு.க.வின் தாபகர் எம்.ஜி. இராமச்சந்திரனும் அவருக்கு பிறகு கட்சியின் தலைவராக இருந்த ஜெயலலிதாவும் மாநிலத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் யோசனைக்கு ஒருபோதும் ஆதரவாக இருந்ததில்லை. ஆனால், கட்சி அந்த தேர்தலில் 132 ஆசனங்களை கைப்பற்றியதால் கவலைப்படுவதற்கு காரணம் இருக்கவில்லை.

2006 சட்டசபை தேர்தலில் சாதாரண பெரும்பான்மைக்கு குறைவான ஆசனங்களில் (96) தி.மு.க. வெற்றி பெற்றது. அவ்வாறிருந்தாலும், தி.மு.க. அதன் கூட்டணிக் கட்சிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள மறுத்தது. காங்கிரஸூடன் அதிகாரத்தினைப் பகிர்ந்து கொள்ளாமல், மாநிலத்தில் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய அளவுக்கு தி.மு.க. தலைவருக்கும் காங்கிரஸின் அன்றைய தலைவி சோனியா காந்திக்கும் இடையில் நல்லதொரு நட்புறவு இருந்தது.





எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் கூட்டரசாங்கம் அமையும் என்று ஏப்ரிலில் அறிவித்த பிறகுஅமித் ஷா அந்த நிலைப்பாட்டை பல நேர்காணல்களில் ஊடகங்களுக்கு மீண்டும் வலியுறுத்தி தெரிவித்தார். ஆனால், அது விடயத்தில் அண்ணா தி.மு.க.வுக்கு தெளிவு இருக்கவில்லை. மத்திய அமைச்சரின் நிலைப்பாடு தொடர்பாக கருத்து தெரிவித்த அண்ணா தி மு.க. பேச்சாளர் வைகைச்செல்வன் தமிழ்நாடு மாநிலத்தில் கூட்டரசாங்கம் என்ற கோட்பாட்டை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை என்று குறிப்பிட்டார்.

அதேபோன்றே 2026 சட்டசபை தேர்தல்களுக்கு முன்னதாக மாநிலம் தழுவிய சுற்றுப் பயணத்தை ஜூலை 7 ஆம் திகதி தொடக்கிய பழனிச்சாமியும் தனியாக பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றிய பிறகு அண்ணா தி.மு.க அரசாங்கத்தை அமைக்கும் என்று குறிப்பிட்டதை காணக்கூடியதாக இருந்தது. அமித் ஷாவின் நிலைப்பாடு தொடர்பாக பழனிச்சாமியிடம் கேட்கப்பட்ட போது மாநிலத்தில் தனிக்கட்சி ஆட்சியை ஷா ஏற்றுக் கொண்டதாகவே அவரின் கருத்தை தான் அர்த்தப்படுத்துவதாக கூறினார்.

இரு கட்சிகளுமே முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பதற்கு மத்தியிலும் பாரதிய ஜனதாவின் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனும் மத்திய இணையமைச்சர் எல். முருகனும் பழனிச்சாமியின் பிரசாரத் தொடங்க நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

ஒரு நேர்காணலில் அமித் ஷா முதலமைச்சர் பதிவிக்கு



தி. இராமகிருஷ்ணன்

அண்ணா தி.மு.க.வில் இருந்தே நியமனம் செய்யப்படும் என்று கூறினாலும் பழனிச்சாமியின் பெயரை அவர் குறிப்பிடவில்லை. இதை தி.மு.க. வட்டாரங்கள் கவனிக்கத் தவறவில்லை. அண்ணா தி.மு.க.வின் பொதுச் செயலாளரை அசௌகரியப்படுத்துவதில் நாட்டம் காட்டிய தி.மு க. மத்திய அமைச்சர் ஷாவின் கருத்து பழனிச்சாமியின் தலைமைத்துவ தகைமைகளில் அவருக்கு நம்பிக்கையில்லை என்பதையே வெளிக்காட்டுகிறது என்று கூறியது. இறுதியில், பழனிச்சாமியே அரசாங்கத்துக்கு தலைமை தாங்குவார் என்று தெளிவுபடுத்த வேண்டிய நிலை நாகேந்திரனுக்கு ஏற்பட்டது.

அவ்வாறிருந்தாலும், கோயம்புத்தூரைச் சேர்ந்த முன்னாள் மாநகராட்சி நிருவாக அமைச்சர் எஸ்.பி. வேலுமணியையே அமித் ஷா மனதில் கொண்டிருக்கக்கூடும் என்ற ஊகங்கள் பரவலாக அடிபட்டன. முன்னர் அண்ணா தி.மு.க.வில் பலம்பொருந்தியவராக விளங்கும் வேலுமணி சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் பேரூர் ஆதீனத்தின் தலைவர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ராஷ்டிரிய சுயம்சேவக் .(ஆர்.எஸ்.எஸ். ) தலைவர் மோகன் பகவாத்துடனும் பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர்களுடனும் ஒரே மேடையில் கலந்து கொண்டார். அது தொடர்பாக பிறகு விளக்கமளித்த வேலுமணி அந்த நிகழ்வை 'அரசியல் சார்பற்றது' என்று வர்ணித்ததுடன் உள்ளூர் சட்டசபை உறுப்பினர் என்ற வகையில் மாத்திரமே அதில் பங்கேற்றதாகவும் குறிப்பிட்டார்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டு குறித்து அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக வேலுமணி உட்பட மூத்த சகாக்களுக்கும் எடப்பாடி பழனிச்சாமிக்கும் இடையில் அபிப்பிராய பேதங்கள் நிலவியதாக செய்திகள் வெளியாகின.

அரசாங்கத்தின் தன்மை குறித்து மூண்டிருக்கும் விவாதம் எதிர்க்கட்சிகளுக்கு பாதகமாக அமையும் என்பதால், அந்த பிரச்சினையை நேரகாலத்தோடு தீர்த்துக்கொள்வது கூட்டணியின் நலன்களுக்கு உகந்ததாக அமையும். பல்வேறு கூட்டணிகளில் அங்கம் பெறவிருக்கும் அரசியல் கட்சிகள் குறித்து இன்னமும் இறுதி செய்யப்படாமல் ஒரு சூழ்நிலையில் அண்ணா தி.மு.க. - பாரதிய கூட்டணியில் இந்த விவாதம் மூண்டிருப்பதை விளக்கிக் கொள்ள முடியவில்லை. (தி இந்து)

# மீன் வள மேலாண்மை அவசியம்!

பேராசிரியர் தி.ஜெயராஜசேகர்



கடற்கரையிலிருந்து 12 நாட்டிக்கல் மைல்கள் வரை தீரக நீர்ப்பரப்பு (கரையை ஒட்டிய கடல் நீர் பரப்பு) என்றும், அதற்கு அப்பால் 12 முதல் 200 நாட்டிக்கல் மைல்கள் வரையிலான பகுதி பிரத்யேக பொருளாதார மண்டலம் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்திய பிரத்யேக பொருளாதார மண்டலத்தின் பரப்பளவு சுமார் 20.2 லட்சம் சதுர கி.மீ. ஆகும். நமது நாடு ஆண்டுக்கு சுமார் 25 முதல் 28 லட்சம் மெட்ரிக் டன் மீன்களை உற்பத்தி செய்கிறது. இதில் 60 சதவீத மீன்கள் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கடல்வாழ் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிப்பதையும், அவற்றை வேட்டையாடுவதையும் தடுக்கும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், மீன் பிடித்தலை வரைமுறைப்படுத்தும் கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்டம், கடற்கரைப் பகுதிகளில் உள்ள கட்டடங்கள், தொழில்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிக்கை, கடல் மாசுபாட்டை தடுக்க கூடிய சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், மீன்பிடி கட்டுப்பாடுகளை நிர்ணயிக்கக்கூடிய இந்திய மீன்பிடி சட்டம், கடல் உயிரின மரபணு வளங்களைப் பாதுகாக்க உயிரியல் பல்வகைமைச் சட்டம் மற்றும் கடல் நீர் பரப்பு பற்றிய சூழலியல் விதிகளைக் கொண்டுள்ள ஐ.நா. சபையின் கடல் சட்ட சாசனம் போன்றவை இந்தியாவில் நடைமுறையில் உள்ளன.

அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையின் மாநில பட்டியல் பிரிவு 21இன் படி தீரக நீர்ப்பரப்பு எல்லைக்குள் மீன்பிடி தொழில் கண்காணிக்கப்படுகிறது.

> **இந்தியாவில் மீன்வளத்தைப் பாதுகாப்பதற்காக இருக்கும் வசதிகள் பற்றி இக்கட்டுரை விபரிக்கின்றது. அங்கு இழுவைமடி மீன்பிடியை தடை செய்துகொண்டு, தமது மீனவர்கள் இலங்கைக்கடற்பரப்பிற்குள் இழுவைமடி மீன்பிடிப்பதை அனுமதிக்கவேண்டும் என்று தமிழகத்திலருந்து குரல்கொடுப்பதும். தடைசெய்யப்பட்ட மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைதுசெய்யும்போது அதற்கு எதிராக குரல்கொடுப்பதும் ஏன் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. ஆ-ர்.**

1979-ஆம் ஆண்டு மத்திய அரசால் உருவாக்கப்பட்ட மாதிரி மசோதாவின் அடிப்படையில் கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தீரக நீர்ப்பரப்பு கடல் எல்லைக்குள் உள்ள மீன்வளத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும் கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்டங்களை இயற்றியுள்ளன.

[illegible] செய்வதற்காக இந்தியா முதன்முதலில் 2004-ஆம் ஆண்டு தேசிய கடல் மீன்வளக் கொள்கையை உருவாக்கியது. சமீபத்திய தேசிய கடல் மீன்பிடிக் கொள்கைக்கான வரைவு 2020-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்திய பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் மீன்வளத்தின் தற்போதைய நிலையை மதிப்பிடுவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் நிபுணர் குழுவை அமைத்துள்ளது. இந்தக் குழு இந்திய கடல் பகுதிகளில் மீன்வளத்தை சீரான இடைவெளியில் மதிப்பிடுகிறது.

நிபுணர் குழு மதிப்பீட்டின்படி, மீன்வளத்தை மேம்படுத்தவும் நிலையான மீன்வளத்தை உறுதி செய்யவும் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மழைக் காலங்களில் 61 நாள்கள் மீன்பிடி தடை, மீன்வள அழிவை ஏற்படுத்தும் மீன்பிடி முறைகள், செயற்கை ஒளியீரி (எல்.இ.டி.) விளக்கு மற்றும் இழுவை மடி வலை பயன்பாடுகளுக்கான தடை போன்றவை இதில் அடங்கும்.

இந்திய பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் அழிவின் விளிம்பில் உள்ள திமிங்கல சுறா, பழுப்பு நிற ராட்சத கிடார், வாள் சுறா, பெருந்திரளை (பாக்குவெட்டி), நெப்போலியன் திரளை (நெப்போலியன் லாப்ரஸ்) கடல் குதிரைகள் மற்றும் 60-க்கும் மேற்பட்ட சுறா போன்ற மீன் இனங்கள் சூழலியல் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இது மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

சட்டவிரோத மீன்பிடி நடைமுறையால் பல்லுயிர் வளம் நிறைந்ததாகவும், கோடிக்கணக்கான மீனவர்களின் தாயகமாகவும் உள்ள இந்தியாவின் 7,500 கி.மீ. கடற்கரை போதுமான கண்காணிப்பின்றி அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. மீன்கள் மற்றும் கணவாய்களை கடலின் மேல் பரப்புக்கு ஈர்க்கவல்ல சக்தி வாய்ந்த செயற்கை விளக்கு பயன்பாடு போன்ற சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகள் 2017ஆம் ஆண்டு முதல் இந்திய பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் குறையவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அரசியல் பற்றி ஒரு கேள்வி: யாரை நோக்கி கடிதம் எழுத வேண்டும்?



யதீந்திரா

தமிழ் அரசியல் சூழலில் பேசப்படும் விடயங்களில் எதை நோக்கி எழுதினால் பயனுண்டு? எழுதுவதற்காக அமர்ந்தவுடன் முதலில் இந்தக் கேள்வி தான் எழுவதுண்டு. நமது எழுத்துக்கள் அரசியல்ரீதியில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்று இனியும் சிறுபிள்ளைத்தனமாக நம்பிக் கொண்டிருந்தால் அது மடைமை. - அப்படியாயின் ஏன் எழுத வேண்டும்? ஆகக் குறைந்தது பொய்களையும் உண்மைகளையும் பிரித்து பார்க்க முற்படுபவர்களுக்கு எனது எழுத்துக்கள் ஒரு வேளை உதவலாம். இந்த அடிப்படையில் தமிழர் அரசியலில் கடிதம் எழுதும் விடயம் பற்றிப் பார்ப்போம். கடிதம் எழுதும் விடயத்தை இன்றைய உலக அரசியலோடு பொருத்தி, ஆராய்வது தான் இந்தக் கட்டுரையின் நோக்கம் மற்றும்படி கடிதம் எழுதுவதை ஊக்குவிப்பதோ அல்லது இவ்வாறான கடிதங்களால் அதிசயங்கள் நிகழுமென்று மக்களுக்கு கண்ணாமூச்சி காட்டுவதோ அல்ல. மாறாக, உண்மைகளைச் சொல்வது. அந்த உண்மைகள் ஒரு சிலரையாவது சிந்திக்கத் தூண்டுமானால், அதுதான் இவ்வாறான எழுத்துக்களின் பயனாக இருக்க முடியும்.

கடிதம் எழுதும் அரசியல் என்பது ஒரு அண்மைக்கால கண்டுபிடிப்பாகும். எனது அவதானத்திற்கு எட்டியவரையில், ஒரு இயக்கம் இன்னொரு நாட்டை நோக்கி கடிதம் எழுதியது என்றால் அது தமீழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாகத்தான் இருக்க முடியும். இது பற்றி அன்ரன் பாலசிங்கம் தனது போரும் சமாதானமும் நூலில் குறிப்பிட்டிருக்கின்றார். தமிழ் ஆயுத இயக்கங்களுக்கான இந்தியாவின் பயிற்சித் திட்டத்தில் விடுதலைப் புலிகளையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரி, தான் கடிதம் எழுதியதாக பாலசிங்கம் எழுதியிருக்கின்றார். வன்னிக் காட்டில் இருந்த பிரபாகரனின் உத்தரவுக்கமைவாக தான் அப்போது இந்திரா காந்திக்கும், இந்திய உளவுத்துறையான றோவின் தலைவராக இருந்த சக்சேனாவிற்கு கடிதம் எழுதியதாகவும், அதனைத் தொடர்ந்தே இந்திய உளவுத்துறை விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களையும் பயிற்சித் திட்டத்தில் இணைத்துக் கொண்டதாகவும் பாலசிங்கம் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த அடிப்படையில் நோக்கினால் பாலசிங்கத்தின் கடிதத்தைத்தான் ஒரு வெளிநாட்டு தலைவருக்கான முதல் கடிதமாகக் குறிப்பிட முடியும் - அது உண்மையாக இருந்தால்.

2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் தமிழர் அரசியல் நீதிக்கான கோரிக்கைகளாகவும் மனித உரிமைக்கான குரலாகவும் மாற்றம் கண்டது. விடுதலைப் புலிகள் அரசியலை தீர்மானித்த காலத்தில் அதே போன்று பல தமிழ் இயக்கங்கள் இயங்கிய காலத்தில் மனித உரிமை என்னும் சொல்லை யாரேனும் உச்சரித்ததாக பதிவுகள் இல்லை - மேலும் மனித உரிமை என்னும் சொல்லை உச்சரிப்பதற்கான தகுதியுடனும் எந்தவொரு இயக்கமும் இருந்திருக்கவும் இல்லை. அடிப்படையில் மனித உரிமை, பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்னும் கோரிக்கைகள் அனைத்துமே, 2009இற்கு பின்னரான அல்லது தமீழீழ விடுதலைப் போராட்டத்தின் தோல்விக்கு பின்னரான கோசங்களாகும்.

இந்தப் பின்புலத்தில்தான் ஜக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் எழுதும் விடயமொன்று தமிழர் அரசியலில் தலைநீட்டியது. பின்னர் யார் சரியாக கடிதம் எழுதுகின்றனர் - நாங்கள் இனப்படுகொலையை வலியுறுத்தினோம் - அவர்கள் வலியுறுத்தவில்லை - சிலர் அரசாங்கத்தை காப்பாற்ற முயற்சிக்கின்றனர் என்றெல்லாம் கட்சிகளின் தலைவர்களும் தொண்டர்களும் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டனர். மக்கள் வழமைபோல் வேடிக்கை பார்த்தனர். சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் தங்களின் பங்கிற்கு கடிதம் எழுதியிருக்கின்றனர். அண்மையிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அனைத்து கட்சிகளையும் இணைத்து கடிதம் எழுதுவது பற்றிப் பேசியிருந்தார்.



Francesca Albanese

**ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் ஒருவர் மீதான தடையை நீக்குங்கள் என்று அவர் அமெரிக்காவிற்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் போது, நாங்களோ இலங்கையிடமிருந்து நீதியை பெற்றுத்தருமாறு அவருக்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றோம்.**

கடிதம் எழுதுவதற்கும் உலக அரசியலை புரிந்து கொள்வதற்கும் ஒரு தொடர்புண்டு. நாங்கள் ஏன் கடிதம் எழுத முற்படுகின்றோம்? - எங்களுக்கு உதவக் கூடிய நிலையில் இருப்பவர், எங்கள் மீது பரிவு காண்பிப்பார், எங்களை திரும்பிப்பார்ப்பார் என்னும் எதிர்பார்ப்பில்தானே கடிதம் எழுதப்படுகின்றது. ஆனால் நீங்கள் கடிதம் எழுதுவரின் நிலையோ மிகவும் பரிதாமாக இருக்கின்ற போது அவரால் எவ்வாறு உதவ முடியும்?

இதுவரையில் தமிழ் கட்சிகள் யாரை நோக்கி கடிதம் எழுதியிருக்கின்றன. அதிகமாக ஜக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரை நோக்கித் தான் கடிதங்கள் சென்றிருக்கின்றன. இடையில் ஒரிரு தடவைகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை நோக்கியும் சில கடிதங்கள் சென்றிருக்கின்றன. அதிலும் ஏட்டிக்கு போட்டி. நீதியை நிலைநாட்டுவது மனித உரிமைகளை உறுதிப்படுத்துவது - இந்த விடயத்தில் இந்தியாவினால் ஒன்றும் செய்ய முடியாது. அது இந்தியாவின் அயலுறவுக் கொள்கையிலும் இல்லை. அடுத்ததாக ஜக்கிய நாடுகள் சபையினால் என்ன செய்ய முடியுமென்ற பார்த்தால் அதன் நிலைமையோ, அந்தோ பரிதாபம்.

சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் பிரான்செஸ்கா அல்பானிஸ் என்பவர் மீது தடை வித்திருக்கின்றது. இவர் ஜக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பாலஸ்தீன விவகாரங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர். இவர் தனது பொறுப்புக்களுக்கு அப்பால் சென்று அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் எதிராக அரசியல்ரீதியில் செயற்பட்டார் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இவர் மீது தடைவி திக்கப்பட்டிருக்கின்றது. இவர் மீதான தடையை மறுபரீசீலனை செய்யுமாறும், இது மனித உரிமைகள் பேரவையின் மீதான நம்பகத் தன்மையையும் செயற்பாடுகளையும் பாதிக்கும் என்றும் கூறி, ஜ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் அமெரிக்காவிற்கு கடிதம் எழுதியிருக்கின்றார். ஜ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் ஒருவர் மீதான தடையை நீக்குங்கள் என்று அவர் அமெரிக்காவிற்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் போது, நாங்களோ இலங்கையிடமிருந்து நீதியை பெற்றுத்தருமாறு அவருக்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றோம்.

இந்த இடத்தில்தான் உலக அரசியலை எவ்வாறு புரிந்து கொள்வது என்று தமிழர்கள் படிக்க வேண்டும். தமிழ்ச் சூழலிலுள்ள பெரும் பிரச்சினையே கற்றுக் கொள்ள முயற்சிப்பதில்லை மாறாக, எங்கள் தாத்தாவிற்கு ஒரு யானை இருந்தது என்னும் கற்பனையில் காலத்தை கடத்தி விட்டு, பின்னர் மற்றவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, தங்களது இயலாமையை மறைத்துக் கொள்வது.

இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது காசாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் - யுத்தம் தொடர்ந்தால் இன்னும் பலர் கொல்லப்படுவார்கள் ஆனால் ஜக்கிய நாடுகள் சபையால் என்ன செய்ய முடிந்தது? இந்தக் கேள்வியின் அடிப்படையில் சிந்தித்தால் நீங்கள் புத்திசாலிகள். நமது சூழலில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஜ.சி.சி) தொடர்பில் பலர் பேசியிருக்கின்றனர். இது தொடர்பில் கட்சிகள் மத்தியில் அதிகம் பேசியவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அவர் உலகை அறிந்து பேசுகின்றாரா அல்லது அறியாமல் பேசுகின்றாரா என்னும் கேள்வியை ஒரு பக்கமாக வைப்போம் ஆனால் முயற்சித்தால் உலகை புரிந்து கொள்வது கடினமான விடயமல்ல.

நீங்கள் நம்பும் விடயங்களின் மறுபக்கம் என்ன என்பது தொடர்பில் எப்போது அறிவுபூர்மான அவதானம் அவசியம். ஆராய்ச்சி அவசியம். ஆராய்ந்து அறிவதன் மூலம்தான் உண்மைகளை அறிய முடியும். இன்னொரு உதாரணத்தை பார்ப்போம் - அப்போதைய இலங்கையின் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா 2020இல் அமெரிக்காவினால் தடைப்பட்டியலில் இடப்பட்டார். இதெல்லாம் தங்களால்தான் என்று சிலர் சொல்வதையும் நாம் கடந்து சென்றிருக்கின்றோம். அதனை விடுவோம். இப்போது அதே பட்டியலில்தான் ஜ.நா சிறப்பு அறிக்கையாளரும் சேர்க்கப்பட்டிருக்கின்றார். அவர் மட்டுமா?

கடந்த யூன் மாதம், இன்னும் சிலரையும் அமெரிக்கா கற்றுப்பட்டியிலில் இட்டிருக்கின்றது. அவர்கள்தான் உங்களுக்கான அநீதியை விசாரித்து, நீதியை தர வல்லவர்கள் - அவர்களது பெயர்கள் வருமாறு : SOLOMY BALUNGI BOSSA, LUZ DEL CARMEN IBANEZ CARRANZA, REINE ADELAIDE SOPHIE ALAPINI GANSOU, BETI HOHLER Ju

இவர்கள் நால்வரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகள் என்பதை ஒன்றுக்கு பல முறை உச்சரித்துக் கொண்டால் நீங்கள் புத்திசாலிகளாகலாம். இதில் இருவரோ, ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறி, அதனை விசாரித்தவர்கள் - மற்றும் இருவரோ, இஸ்ரேல் காசாவில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறி, பிரதமர் நெத்தன்யாகுவை போர்க் குற்றவாளி என்று அறிவித்து, அவரை கைது செய்யுமாறு தீர்ப்பு வழங்கியவர்கள்.

இப்போது, சர்வதேச நீதிபதிகளும், ஜ.நா சிறப்பு அறிக்கையாளரும் சவேந்திரசில்வாவும் ஒரே தடைப் பட்டியலில் தான் இருக்கின்றனர். இப்போதாவது உலகம் புரிய வேண்டும் அல்லவா. இதன் அடிப்படை என்ன? அமெரிக்கா உலகில் தனியான மேலாதிக்கத்தை விரும்புகின்றது. அந்த மேலாதிக்கத்தின் மீது வேறு எந்தவொரு அமைப்புக்களும் செல்வாக்குச் செலுத்துவதை அமெரிக்கா அனுமதிக்காது. இது சரியாக அல்லது தவறா என்பது தேவையற்ற கேள்வி. அப்படிக் கேட்பது கூட உலகை புரிந்து கொள்ள முடியாமையின் பலவீனம்தான். ஆனால் அமெரிக்கா ஒரு போதும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை பலமான அமைப்பாக இயங்க அனுமதிக்காது அதே போன்று மனித உரிமைகள் பேரவை சுயாதீனமாக இயங்குவதையும் அனுமதிக்காது.

இதன் பின்னரும் நீங்கள் கடிதம் எழுத விரும்பினால் எழுதுங்கள் ஜக்கிய நாடுகள் சபைக்கு அல்ல - மாறாக, அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தை நோக்கி எழுதுங்கள். அமெரிக்கா ஒவ்வொரு ஆண்டும் மனித உரிமைகள் தொடர்பான பிரத்தியேக அறிக்கை ஒன்றை வெளியிடுகின்றது. இதன் மூலம் உலகெங்கும் மனித உரிமை மற்றும் ஜனநாயகத்தின் செழுமையை பாதுகாக்கும் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றது. இந்த அடிப்படையில் அனைத்து கட்சிகளுமாக, சிவில் சமூகக் குழுக்களாக அமெரிக்காவை நோக்கி கோரிக்கைகளை முன்வையுங்கள். விளைவுகள் என்ன என்பதை விட, அவ்வாறு நீங்கள் செயற்படும் போது ஆகக் குறைந்தது, உலகை புரிந்து கொண்டு செயற்படுகின்றோம் என்னும் திருப்தியாவது மிஞ்சலாம் அல்லவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்துபோன யுகமொன்றின் கம்யூனிஸ்ட் தலைவரின் நினைவைக் கொண்டாடுதல்!



- அரவிந்தன்

நீண்டநாட்களுக்கு பிறகு கடந்த நூற்றாண்டின் கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவரின் நினைவைக் கொண்டாடும் நிகழ்வொன்று தலைநகர் கொழும்பில் இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

இலங்கையில் புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடி தலைவர் என்று வர்ணிக்கப்பட்ட காலஞ்சென்ற நாகலிங்கம் சண்முகதாசனின் (சண்) 105 வது பிறந்த தினத்தை (2025 ஜூலை 3) முன்னிட்டு அவரின் பெயரில் இயங்கும் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம் ஜூலை 6 மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நினைவுப் பேருரையையும் நூல் வெளியீட்டையும் ஏற்பாடு செய்திருந்தது.

பேராசிரியர் சி. மௌனகுரு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாரிசில் வாழும் எழுத்தாளர் வி.ரி. இளங்கோவன் நூல் அறிமுக உரை நிகழ்த்த மூத்த கம்யூனிஸ்ட் இயக்க செயற்பாட்டாளர் எம்.ஏ.சி. இக்பால் " சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்" என்ற நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் பிரதிகளை கொழும்பு தமிழ்ச் சங்கத்துக்கு அன்பளிப்பாக அதன் தலைவி சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவிடம் கையளித்து நூல் சம்பிரதாயபூர்வமாக வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் "கொந்தளிப்பான சர்வதேச நிலைவரமும் இலங்கைக்கான மார்க்கமும்" என்ற சமகாலத்துக்கு கச்சிதமான பொருத்தப்பாட்டைக் கொண்ட தொனிப் பொருளில் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

தற்போது ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான ஆளும் தேசிய மக்கள் சக்தியின் கூட்டங்களை தவிர மற்றும்படி இடதுசாரி இயக்க நிகழ்வுகளில் பெருமளவில் மக்கள் கலந்துகொள்வதில்லை. குறைந்த எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களிலும் கூட, அவர்களில் அதிகப் பெரும்பாலானவர்கள ஐம்பது, அறுபது, எழுபது வயதுகளைக் கடந்தவர்களாகவே இருப்பார்கள்.

இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் என்று அந்த நிகழ்வுகளில் எவரையாவது காண முடியும் என்றால், அவர்கள் பெரும்பாலும் ஊடகங்களைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். அரசியல் ஆர்வம் கொண்ட சில இளைஞர் யுவதிகள் அல்லது அரசியல் விஞ்ஞான மாணவர்கள் சில வேளைகளில் கலந்து கொள்வதுண்டு.

ஆனால், அன்றைய சண் நினைவு நிகழ்வில் மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் பலருக்கு ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. ஓரளவுக்கு இளைஞர்களையும் காணக்கூடியதாக இருந்தது. கொழும்பில் இருந்து வெளியாகும் முக்கியமான தமிழ்ப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், தமிழன் ஆகிவற்றின் பிரதம ஆசிரியர்கள் உட்பட பல பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.




கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் வழமையாக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் தவறாமல் கலந்து கொள்வார்கள். ஆனால், சண் நினைவு நிகழ்வில் அந்த "வழமையான" கூட்டத்தினரை காணவில்லை. ஆனால், வேறு புதியவர்கள் பலர் கலந்து கொணடனர். அகிலன் கதிர்காமரின் உரையை சபையோர் இறுதிவரை கேட்டுக் கொண்டிருந்தனர். அவரது உரையின் தொனிப் பொருள் அதற்கு ஒரு முக்கிய காரணமாகவும் இருக்கலாம்.

அந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தைச் சேர்ந்தவர்களுக்கு மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் நிச்சயமாக பெரும் மகிழ்ச்சியை கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கடந்த நூற்றாண்டில் கணிசமான காலப் பகுதியில் இலங்கையின் முக்கியமான இடதுசாரி இயக்க அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கிய சண்ணைப் பற்றி இன்றைய இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் (இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றை ஓரளவுக்கேனும் தெரிந்து கொண்டவர்களை தவிர) அறிந்திருக்க வாய்ப்பில்லை.

சண் 1993 பெப்ரவரி 8 தனது 74 வது வயதில் ஐக்கிய இராச்சியத்தின் பேர்மிங்ஹாமில் காலமானர். சண் மறைந்து 32 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவரின் நினைவைக் கொண்டாடும் நிகழ்வில் பெருந்திர ளானவர்கள் பங்கேற்றது குறித்து அதற்கு தலைமை தாங்கிய பேராசிரியர் மௌனகுரு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி தெரிவித்ததை காணக்கூடியதாக இருந்தது.

சண்ணின் பிறந்த நூற்றாண்டு நினைவை முன்னிட்டு 2020 ஜூலையில் அரசியல் ஆய்வாளர்கள், இராஜதந்திரிகள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டு ரகள் தமிழில் மொழியாக் கம் செய்யப்பட்டு பத்திரிகைகளில் ஏற்கெனவே வெளியாகியிருந்தன. அந்த கட்டுரைகளின் இரு மொழி களிலுமான தொகுப்பு "சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்" என்ற நூலாக வெளியிடப்பட்டது.

சண் நூற்றாண்டை முன் னிட்டு அரசியல் ஆய்வாளரும் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜெயதிலக 2020 ஜூலை 5 "சண்டே ஐலண்ட்" பத்திரிகையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். தயானின் தந்தையாரான பிரபலமான ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் மேர்வின் டி சில்வாவின் நெருங்கிய நண்பர்கள் என்பதால் அவருக்கு சிறுபராயத்தில் இருந்தே சண் பரிச்சயமானவராக இருந்தார்.

தயானின் கட்டுரையை வாசித்த பிற்பாடுதான் மூத்த ஆங்கிலப் பத்திரிகையாளரான மனிக் டி சில்வா (தற்போது சண்டே ஐலண்ட் பிரதம ஆசிரியர்), முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம மற்றும் கனடாவில் தற்போது வசிக்கும் அரசியல் ஆய்வாளரும் பொறியியல் நிபுணருமான ராஜன் பிலிப்ஸ் ஆகியோருக்கு சண்ணின் நினைவு வந்தது போலும். அவர்கள் மூவரும் அடுத்தடுத்து சண்ணைப் பற்றி அடுத்தடுத்து சண்டே ஐலண்ட் பத்திரிகையில் எழுதினார்கள்.

கனடாவில் வாழும் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ் ஜெயராஜ் "தமிழ்த் தீவிரவாதிகளின் ஆயுதப்போராட்டமும் சண்முகதாசனும்" என்ற தலைப்பில் டெயிலி மிறர் பத்திரிகையில் 2020 ஜூலை 11 ஒரு நீண்ட கட்டுரையை எழுதினார். அவர் 1988 பிற்பகுதியில் வட அமெரிக்காவுக்கு புலம்பெயருவதற்கு முன்னர் சண்ணை அவரது கொள்ளுப்பிட்டி ஸ்கொஃபீல்ட் பிளேஸ் இல்லத்தில் அடிக்கடி சந்தித்து பேசிய அனுபவத்தைக் கொண்டவர். அந்த சந்திப்புக்கள் குறித்து ஜெயராஜ் கட்டுரையில் ஓரளவு விரிவாக எழுதியிருக்கிறார்.

நோர்வேயில் வாழும் பேராசிரியர் என். சண்முகரத்தினம் சண்ணின் 31 வது நினைவு தினத்தை முன்னிட்டு தமிழில் எழுதிய நீண்ட கட்டுரை 2024 பெப்ரவரி 8 கொழும்பு தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியானது. சண்ணின் நினைவுப் பேருரை நிகழ்வுக்கு தலைமை தாங்கிச் சிறப்பிக்குமாறு மார்க்சிய கற்கைகளுக்கான சண்முக தாசன் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் பேராசிரியர் மௌனகுருவிடம் கேட்டபோது அதை ஏற்றுக் கொண்ட அவர், சண்முகதாசன் நூற்றாண்டு மனப் பதிவுகள் நூலில் சண்ணுடனான தனது அனுபவங்கள் குறித்து விசேடமாக அந்த கம்யூனிஸ்ட் தலைவரின் கலாரசனை குறித்து ஒரு கட்டுரைரை எழுத விரும்புவதாக கூறினார். அதையடுத்து சண்முகரத்தினத்தின் கட்டுரையுடன் சேர்த்து மௌனகுருவின் கட்டுரையும் நூலில் உள்ளடக்கப்பட்டது.

பத்திரிகையாளர் தனபாலசிங்கம் சண் நூற்றாண்டு நினைவாக எழுதி பத்திரிகைகளில் வெளியிட்ட கட்டுரையும் இரு மொழிகளிலும் நூலில் இடம் பெற்றி ருக்கிறது. தனபாலசிங்கம் சண்ணுடன் நீண்ட காலம் நெருங்கிப்பழகிய அனுபவத்தைக் கொண்டவர். அவரே மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் சார்பில் மேற்குறிப்பிட்ட கட்டுரைகளை தமிழில் மொழியாக்கம் செய்து நூலைத் தொகுத்தார்.

கலாநிதி சரத் அமுனுகம சண்ணுக்கும் ஜே.வி.பி.யின் தாபகத் தலைவரான ரோஹண விஜேவீரவுக்கும் இடையிலான உறவுகள் குறித்து எழுதியிருக்கும் கட்டுரை காலஞ்சென்ற அந்த கிளர்ச்சித் தலைவரின் கட்சி ஆட்சியதிகாரத்தில் இருக்கும் பின்புலத்தில் முக்கியமான ஒன்றாக அமைந்திருக்கிறது. தற்போதைய ஜே.வி.பி தலைவர்களும் உறுப்பினர்களும் தங்களது இயக்கத்தின் வேர்களை ஓரளவுக்கு அறிந்து கொள்வதற்கு கலாநிதி அமுனுகமவின் கட்டுரை உதவியாக இருக்கும்.

பேராசிரியர்கள் சண்முகரத்தினமும் மௌனகுருவும் 1960 களின் முற்பகுதியில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மூண்ட மாபெரும் தத்துவார்த்தப் போராட்டத்தை அடுத்து உலக நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பிளவடைந்ததை போன்று இலங்கையிலும் நிகழ்ந்தபோது சண் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட் அணியின் செயற்பாடுகளுடன் (பேராதனை பல்கலைக்கழக மாணவர்களாக) தங்களை இணைத்துக் கொண்டவர்கள். தனபாலசிங்கத்தைப் பொறுத்தவரை, பெரும்பாலும் சண்ணின் இறுதிக் காலத்தில் அவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர். அவர் பத்திரிகையாளராக இருந்த காரணத்தால் அந்த கம்யூனிஸ்ட் தலைவரின் ஆக்கங்கள், அறிக்கைகளை மொழியாக்கம் செய்து தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியிடும் பணியை செய்யக்கூடியதாக இருந்தது.

தனது சுயசரிதையை சண் சொல்லச்சொல்ல எழுதிய அரிய அனுபவத்தைக் கொண்ட தனபாலசிங்கம், சண்ணின் அச்சேறாத எழுத்துக்களை கடந்த பல வருடங்களாக நூல்களாக வெளியிட்டு வரும் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

இந்த மூவரையும் தவிர, சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள் நூலில் அடங்கியிருக்கும் மற்றைய கட்டுரைகளை எழுதிய எவருமே கம்யூனிஸ்ட் கட்சியுடன் எந்த வகையிலும் தொடர்பை கொண்டிருந்தவர்கள் அல்லர்.

குறிப்பாக ராஜன் பிலிப்ஸ் கலாநிதிகள் என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா தலைமையில் லங்கா சமசமாஜ கட்சி இருந்த காலத்தில் அதன் ஒரு தீவிர செயற்பாட்டாளராக, காலஞ்சென்ற கலாநிதி குமார் டேவிட் போன்றவர்களுடன் சேர்ந்து இயங்கியவர். சமசமாஜ கட்சியின் ரொட்ஸ்கியவாதத்துக்கு எதிராக சண் நடத்திய கடுமையான தத்துவார்த்த விவாதங்களை அறிந்தவர்கள் சமசமாஜிகளை எந்தளவுக்கு அவர் எதிர்த்தார் என்பதையும் அந்தக் காலப் பகுதியில் சண்ணைப் பற்றி ராஜன் பிலிப்ஸ் எத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருந்திருப்பார் என்பதையும் புரிந்து கொள்வார்கள்.

அதனால் கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளாதவர்கள் சண்ணை வெளியில் இருந்து எவ்வாறு பார்த்தார்கள் என்பதை விளக்கும் கட்டுரைகள் இந்த நூலுக்கு ஒரு பிரத்தியேக பரிமாணத்தைக் கொடுக்கின்றன.

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றை குறிப்பாக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றை கற்கவிரும்பும் அரசியல் மாணவர்களுக்கும் இளைய தலைமுறை ஆய்வாளர்களுக்கும் அந்த இயக்கத்தில் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரி மாணவ காலத்தில் இருந்து இறுதி மூச்சு வரை தனனை இணைத்துக் கொண்டு தொழிலாளர் வர்க்கத்தின் விமோசனத்துக்காக அரை நூற்றாணாடுக்கும் அதிகமான காலமாக உழைத்த ஒரு தலைவரின் வாழ்வை அறிந்து கொள்வதற்கு பெரிதும் உதவக்கூடியது சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள் என்ற நூல். சண்ணின் வாழ்வு இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றுடன் சமாந்தரமானது.

மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம் வெளியிட்ட சில நூல்களின் முன் அட்டையில் சண் சீனப் பெருந்தலைவர் மாவோ சேதுங்கை 60 வருடங்களுக்கு முன்னர் சந்தித்தபோது எடுத்த படம் இடம் பெற்றிருக்கிறது. இந்த புதிய நூலின் அட்டையிலும் கூட அதே படமே காணப்படுகிறது. இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் அதன் பிரதிகளைப் பெற்றுக் கொண்ட சிலர் "இந்த நூலை நாம் முன்னர் பெற்றிருக்கிறோம்" என்று கூறுகிற அளவுக்கு மாவோவுக்கும் சண்ணுக்கும் இடையிலான அந்த வரலாற்று முக்கியத்துவ சந்திப்பின் படம் மார்க்சிய கற்கைளுக்கான சண்முகதாசன் நிலையத்தினரின் நூல்களுடன் ஒன்றிணைந்ததாக இருக்கிறது. அவர்களை பொறுத்தவரை, மாவோவுடனான சண்ணின் சந்திப்பு "புனிதமான" ஒரு அரசியல் நிகழ்வு.

கலாநிதி தயான் ஜெயதிலக மாவோ - சண் நெருக்கம் குறித்து தனது கட்டுரையில் தெரிவித்திருக்கும் கருத்துக்களை மேற்கோள்காட்டி சண் நினைவு நிகழ்வு பற்றிய இந்த பதிவை நிறைவு செய்வது பொருத்தமாக இருக்கும்.

"மாவோவை நன்கு தெரிந்த தோழர் சண் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். சண் மாவோவை சந்தித்து கலந்துரையாடிய ஒரே இலங்கையர் மாத்திரமல்ல, தெற்காசியாவைச் சேர்ந்த சிலரில் ஒருவருமாவார். நக்சலைட்டுக்கள் என்று நன்கு அறிப்பட்ட இந்தியாவின் மாவோவாத இயக்கமான கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட்) யின் தலைவரான சாரு மசுந்தார் மாவோவை ஒருபோதும் சந்தித்ததில்லை.

"கலாசாரப் புரட்சியின் உச்சக்கட்டத்தின்போது பெய்ஜிங் தியனென்மென் சதுக்கத்தில் 15 இலட்சம் செங்காவலர்களின் அணிவகுப்பை மாவோ பார்வையிட்டபோது அவருக்கு அருகில் சண் நின்றார். செங்காவலர்கள் மத்தியில் உரையாற்றுவதற்கும் அவர் அனுமதிக்கப்பட்டார். இலங்கையின் மாவோவாத இயக்கத்தின் தலைவர் சர்வதேச ரீதியில் மாவோ சேதுங் சிந்தனைக்கு வழங்கிய தத்துவார்த்த பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் சிறுபான்மை இன முரண்பாடுகள் : ட்ரூஸ் மக்களை காக்கவா இஸ்ரேல் தலையீடு ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

சிரியாவின் தெற்கு மாகாணமான சுவைடாவில் உள்ள ட்ரூஸ் மற்றும் பெடோயினுக்கு இடையே கடுமையான ஆயுத மோதல்கள் அண்மையில் வெடித்தன. தொடர்ந்து மோதல்கள் அதிகரித்து வருவதுடன், மதப் பதட்டங்களின் அழுத்தத்தின் கீழ் டமாஸ்கஸ் அரசாங்கம் மீண்டும் ஸ்திரத்தன்மைக்காக போராடி வருவதாக கூறியுள்ளது.

டமாஸ்கஸில் உள்ள மத்திய அரசாங்கத்திடமிருந்து தீர்க்கமான அமைதி தலையீட்டை ட்ரூஸ் இன மக்கள் கோரியுள்ளனர். ஆறு மாதங்களுக்கு முன்பு பஷார் அல்-அசாத் அரசு வீழ்ந்ததிலிருந்து, ஜனாதிபதி அகமது அல்-ஷாராவின் புதிய அரசாங்கம் போரினால் பாதிக்கப்பட்ட சிரியாவில் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க முயற்சித்து வருகிறது. இருப்பினும், வன்முறை வெடிப்புகள், பெரும்பாலும் மத ரீதியாக, தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன.

சுவைடாவில் நிலைமையைக் கட்டுப்படுத்த சிரிய பாதுகாப்பு அமைச்சகம் துருப்புக்களை அனுப்பியது. இருப்பினும், கண்காணிப்பகத்தின் கூற்றுப்படி, இராணுவத்தின் ஒரு பகுதி பெடூயின்களின் பக்கம் சண்டையிட்டதாகக் கூறப்படுகிறது. இது ட்ரூஸ் மக்களின் அவநம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியது.

ட்ரூஸ், அலெவிட் மற்றும் கிறிஸ்தவர்கள் தங்கள் பாதுகாப்பு குறித்து அஞ்சுகிறார்கள். சர்வதேச பார்வையாளர்கள் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நிலைமையை கவலையுடன் கண்காணித்து வருகின்றனர். இதே வேளை தெற்கு சிரியாவில் அரசாங்கப் படைகளுக்கும் ட்ரூஸ் போராளிகளுக்கும் இடையிலான வன்முறையில் பலர் கொல்லப்பட்டனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரிய இராணுவம் ஆரம்பத்தில் பெடோயின் மற்றும் ட்ரூஸ் பழங்குடியினருக்கு இடையிலான மோதல்களைத் தடுக்க தவறியது. இதுவே இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களுக்கு வழிவகுத்தது. இதுவே ட்ரூஸ் சமூகத்தைப் பாதுகாப்பதாக இஸ்ரேல் கூறுகிறது.



இதன் விளைவாகவே டமாஸ்கஸில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் பாதுகாப்பு அமைச்சக அலுவலகங்களையும் இஸ்ரேல் கடுமையாக தாக்கியுள்ளது. இதனால் இஸ்ரேலிய அரசுக்கு நான்கு திசைகளில் இருந்தும் கண்டனங்கள் எழுந்துள்ளன. சர்வதேச எதிர்வினையாக இந்த நிலைமையை "பாரிய தொந்தரவு" என்று கூறிய அமெரிக்கா, தாக்குதல்களை நிறுத்துமாறு இஸ்ரேலிடம் கேட்டுக் கொண்டதாக கூறப்படுகிறது.


இருப்பினும், சிரிய இராணுவம் சுவைதா நகரத்திலிருந்து வெளியேறாவிட்டால் தாக்குதல்களை தீவிரப்படுத்துவோம் என்று இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.

### யார் இந்த ட்ரூஸ் இன மக்கள் :

ட்ரூஸ் இன மக்கள் சிரியா, லெபனான் மற்றும் இஸ்ரேலில் சுமார் ஒரு மில்லியன் பின்தொடர்பவர்களைக் கொண்ட ஒரு அரபுப் பிரிவாகும். அவர்கள் மதமாற்றங்களையோ அல்லது கலப்புத் திருமணங்களையோ அனுமதிக்காத ஒரு தனித்துவமான இஸ்லாம் வடிவத்தைப் பின்பற்றுகிறார்கள். சிரியாவில், அவர்களில் பெரும்பாலோர் சுவைதா மற்றும் அருகிலுள்ள கோலன் மலைகளில் வசிக்கின்றனர். இது 1981 இல் இஸ்ரேலால் இணைக்கப்பட்ட ஒரு பகுதியாகும்.

20,000 க்கும் மேற்பட்ட ட்ரூஸ் இன மக்கள் கோலானில் வசிப்பதாக அறியப்படுகிறது, அவர்களில் பெரும்பாலோர் சிரிய அடையாளத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

2011 போருக்கு முன்பு, சுமார் 700.000 ட்ரூஸ் மக்கள் சிரியாவில் வசித்து வந்தனர், அவர்களில் பெரும்பாலோர் சுவைதாவில் வசித்து வந்தனர். 11 ஆம் நூற்றாண்டில் இஸ்லாத்திலிருந்து தோன்றிய இந்த மத சிறுபான்மையினர், சிரிய மக்கள் தொகையில் சுமார் 3 சதவீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர்.சிரியாவில், பல சிறுபான்மை இனக்குழுக்கள் வசிப்பதால், இனங்களுக்கிடையே முரண்பாடுகள் நீண்டகாலமாக நிலவுகின்றன. குறிப்பாக, சிரிய உள்நாட்டுப் போருக்குப் பிறகு, இந்த முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. பெரும்பான்மையான சுனி முஸ்லிம்கள் மற்றும் அல்வைட் முஸ்லிம்கள், குர்துகள், கிறிஸ்தவர்கள் போன்ற சிறுபான்மை இனக்குழுக்களிடையே அதிகாரப் பகிர்வு மற்றும் நிலப் பயன்பாடு போன்ற விடயங்களில் மோதல்கள் ஏற்படுகின்றன.




**பல சிறுபான்மை இனங்கள் சிரியாவில் வசிப்பதால் எப்போதும் இனங்களுக்கிடையே முரண்பாடுகள் நிலவுகிறது. புதிய அரசை ஆதரிக்கும் இஸ்லாமிய சக்திகள் அலவைட், ட்ரூஸ் சிறுபான்மை சமூகங்களை அடக்கி வருகின்றன. சிரிய இராணுவம் ஆரம்பத்தில் பெடோயின் மற்றும் ட்ரூஸ் பழங்குடியினருக்கு இடையிலான மோதல்களைத் தடுக்க தவறியது. இதுவே இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களுக்கு வழிவகுத்தது என்றும் கூறப்படுகிறது**

சிரியா கிறிஸ்தவர்கள், அலவைட்டுகள், ட்ரூஸ் மற்றும் பலர் உட்பட பல சிறுபான்மை குழுக்களைக் கொண்ட ஒரு பன்முகத்தன்மை கொண்ட நாடு. இந்த குழுக்கள் தனித்துவமான கலாச்சார மற்றும் மத அடையாளங்களைக் கொண்டுள்ளன.

முக்கிய சிறுபான்மை இனமான குர்துகள் சிரியாவின் மிகப்பெரிய அரபு அல்லாத இனக்குழுவாகும். அவர்கள் முதன்மையாக வடகிழக்கில் வசிக்கின்றனர். சிரிய உள்நாட்டுப் போரில் குர்துகள் தங்கள் சொந்த தன்னாட்சிப் பகுதியை உருவாக்கி சிரிய அரசாங்கத்துடன் ஆயுத மோதல்களில் ஈடுபட்டனர்.

அத்துடன் சிரியாவில் நீண்ட வரலாற்றைக் கொண்ட அந்தியோக்கியன் ஆர்த்தடாக்ஸ், மெல்கைட் கிரேக்க கத்தோலிக்க, சிரியா ஆர்த்தடாக்ஸ், கிழக்கில் அசிரியன், மற்றும் கல்தேயன் கத்தோலிக்க உள்ளிட்ட பல்வேறு இன பிரிவுகள் வாழ்கின்றனர்.

பல கிறிஸ்தவர்கள் மோதலுக்குப் பிந்தைய சிரியாவில் தங்கள் எதிர்காலம் குறித்து கவலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் சம உரிமைகள் மற்றும் சம பிரதிநிதித்துவத்தை நாடுகிறார்கள்.

ஷியா இஸ்லாத்தின் ஒரு பிரிவான அலவைட்டுகள் சிரியாவில் ஒரு குறிப்பிடத்தக்க மத சிறுபான்மையினர். பல தசாப்தங்களாக சிரியாவை ஆண்ட அசாத் குடும்பம் அலவைட்டை சேர்ந்தவர்கள். அவர்களின் கடந்த ஆட்சி ஆதிக்கம் மற்ற இன குழுக்களிடமிருந்து ஆதரவையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது. மாறிவிட்ட அரசியல் சூழ்நிலையில் சில அலவைட்டுகள் ஓரங்கட்டப்படுதல் மற்றும் பாகுபாடு காட்டப்படுவதாக அஞ்சுகிறார்கள்.



மற்றொரு மத சிறுபான்மையினரான ட்ரூஸ், முக்கியமாக சிரியாவின் தென்கிழக்கு பகுதியில் வாழ்கின்றனர். அவர்களும் நாட்டில் தங்கள் பாதுகாப்பு மற்றும் எதிர்காலம் குறித்து கவலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். பிற இன குழுக்களான ஆர்மீனியர்கள், சர்க்காசியர்கள், துர்க்கோமன்கள் போன்ற பிற இன மக்களும் அங்கு வாழ்கின்றனர்.

### சிரிய உள்நாட்டுப் போர் :

சிரிய உள்நாட்டுப் போர் அனைத்து சிறுபான்மை குழுக்களிலும் பேரழிவு தரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது இடம்பெயர்வு, அகதிகள் நெருக்கடிகள், அதிகரித்த குறுங்குழுவாத பதட்டங்களுக்கும் வழிவகுத்தது. பலர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர் அல்லது உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர்.

உள்நாட்டு போர் ஏற்கனவே உள்ள சமத்துவமின்மைகளையும் ஓரங்கட்டப்பட்ட சிறுபான்மை சமூகங்களை



யும் அதிகப்படுத்தியுள்ளது என்ற கவலைகளும் உள்ளன.

சிரியாவில் சிறுபான்மை குழுக்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே உள்ளது. சிலர் ஜனநாயக எதிர்காலத்தை எதிர்பார்க்கிறார்கள். மற்றவர்கள் தொடர்ச்சியான உறுதியற்ற தன்மை மற்றும் மோதல்கள் உருவாகும் என அஞ்சுகிறார்கள். இனம் அல்லது மதம் எதுவாக இருந்தாலும், அனைத்து சிரியர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பைப் பாதுகாப்பதற்கான நல்லிணக்கம், உரையாடல் மற்றும் அர்ப்பணிப்பு தேவையே முக்கியமாகும்.

### இஸ்ரேல் தலையிடும் ட்ரூஸ் இனமும்:

டிசம்பர் 2024 இல் சிரியாவில் பஷார் அல்-அசாத் பதவி கவிழ்க்கப்பட்ட பிறகு, புதிய ஜனாதிபதி அகமது அல்-ஷாரா சிறுபான்மையினரை உள்ளடக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் உறுதியளித்தார். ஆனால் அரசாங்கத்தை ஆதரிக்கும் இஸ்லாமிய சக்திகள் அலவைட்டுகள் மற்றும் ட்ரூஸ் உள்ளிட்ட சிறுபான்மை சமூகங்களை கடுமையாக எதிர்த்து வருகின்றன.

மேலும் ட்ரூஸ் மக்களை நிராயுதபாணியாக்கி புதிய இராணுவத்தில் ஒருங்கிணைக்க மறுத்தமையால், அரசாங்கத்தில் தங்கள் பிரதிநிதித்துவத்தில் அவர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். பல ட்ரூஸ் இன மக்கள் இஸ்ரேலில் வசிக்கின்றனர். இராணுவத்தில் பணியாற்றும் சுமார் 130,000 ட்ரூஸ் மக்களுடனான வரலாற்று மற்றும் குடும்ப உறவுகள் காரணமாக, சிரியாவில் ட்ரூஸைப் பாதுகாப்பதற்கான சண்டையில் தலையிடுவதாக இஸ்ரேல் தற்போது கூறுகிறது.

அத்துடன் ட்ரூஸ் மக்கள் அதிகமாக வசிக்கும் சிரியாவின் கோலான் மலைப் பகுதியை இராணுவ மயமாக்கப்பட்ட பிரதேசம் என்று இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது. ஆனால் சிரிய அரசாங்கம் அதை அதன் இறையாண்மையை மீறுவதாகக் கூறி நிராகரித்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் இஸ்ரேலுக்கும் புதிய சிரிய அரசாங்கத்திற்கும் இடையே ஒரு அமைதி ஒப்பந்தம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அசாத் பதவி கவிழ்க்கப்பட்டதிலிருந்து, சிரியாவை சமாதான ஒப்பந்தங்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதற்கான அமெரிக்க முயற்சிகள் இருந்த போதிலும், இஸ்ரேல் சிரியாவில் தனது தாக்குதல்களைத் தொடர்ந்தது. மேலும் பல பிரதேசங்களைக் கைப்பற்றியது.

டமாஸ்கஸில் உள்ள புதிய அரசாங்கத்தை "தீவிரவாத இஸ்லாமிய ஆட்சி" என்றும் இஸ்ரேல் அரசுக்கு அச்சுறுத்தல் என்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு முன்னர் கூறியிருந்தார். சிரியா மீதான இஸ்ரேலிய தாக்குதல்கள், நாட்டில் அதிகாரத்தை பலப்படுத்துவதற்கான அல்-ஷராவின் முயற்சியை மேலும் சிக்கலாக்குகின்றன.

மேலும் சிரியாவின் இறையாண்மைக்கும் அதன் மக்களுக்கும் ஒரு ஆக்கிரமிப்பை இஸ்ரேல் தொடர்ந்து செய்துவருகிறது எனவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறி பாடசாலையின் மாணவர்களுக்கு சீருடை

வவுனியா, ஜூலை 20

வவுனியா - பூவரசங் குளம் சிறீ பாலமுருகன் ஆலய அறநெறிப் பாட சாலையில் கல்வி கற் கின்ற 30 மாணவர்க ளுக்கு 70, 000 ரூபாய் பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.



நேற்றுச் சனிக்கிழமை காலை இந்த நிகழ்வு நடை பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர், கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள்,

சிறீ பாலமுருகன் ஆலய நிர்வாகிகள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (எ)

# தனியார் கல்வி நிலையத்தில் துவிச்சக்கர வண்டி திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் தனியார் கல்வி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட துவிச்சக்கர வண்டி திருடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் - நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

குறித்த கல்வி நிலையத்துக்கு கல்வி கற்க வந்த மாணவன் ஒருவருடைய துவிச்சக்கர வண்டியே களவாடப்பட்டுள்ளது.

வெளியே இருந்து வந்த நபர் ஒருவர் உள்ளே சென்று துவிச்சக்கர வண்டியை திருடிச் சென்ற காட்சி அங்கிருந்த சி.சி.ரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

துவிச்சக்கர வண்டியை திருடிச் செல்லும் நபர் தொடர்பில் தெரிந்தால் உடன் தகவல் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(எ-05)

# ஈஸ்டர் உண்மை தொடக்கமாக...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் பொருளாதாரக் குற்றங்கள், பிறகு இப்போது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் கள் போன்ற அரசியல் குற்றங்கள். அடுத்து சாத்தியமானால் போர்க்குற்றங்கள். போர்க் காயங்கள் ஆழமானவையாகவும் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்துபவையாக வும் இருக்கின்றன. போர்க்கால துஷ்பிர யோகங்களுக்கு பொறுப்புக்கூற வைப்ப தற்கு அரசாங்கத்திடம் தற்போது இருப் பதாக தோன்றுகின்றதை விடவும் கூடுத லான அளவுக்கு அரசியல் மூலதனம் தேவை. அத்தகைய நடவடிக்கைகள் நாளடைவில் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் முன்னெடுக்கப்படக் கூடும்.

செம்மணி மனிதப் புதைகுழிகள் விவ காரத்தைப் பொறுத்தவரை, முன்னைய அரசாங்கங்கள் மன்னார் மற்றும் மாத்தளை மனிதப் புதைகுழிகள் விடயத்தில் நடந்து கொண்டதைப் போலன்றி, தற்போதைய அரசாங்கம் நீதி விசாரணைகள் சுயாதீன மாக முன்னெடுக்கப்படுவதை அனுமதிக் கின்றது போன்று தெரிகிறது. செம்மணி விசாரணை முன்னெடுக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதை பார்க்கின்றபோது முற்றுமுழுதான தண்டனையின்மை யுகம் முடிவுக்கு வருகின்றது என்பதற்கும் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்பதற்குமான சமிக்ஞைகளை காணக்கூடியதாக இருக் கிறது.

ஆறு வருடங்களாக திருப்திகரமான முடிவைக் காண முடியாமல் இருக்கும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் போன்ற ஒரு குற்றச்செயல் வெற்றிகரமான முறை யில் விசாரணை செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படுமானால், போர்க் காலப்ப குதி உட்பட கடந்த காலத்தை ஆழமாக துருவி ஆராய்வதற்கான வெளி திறக்கப் படக் கூடும். இதைச் சாத்தியமாக்குவது சுயாதீனமான நிறுவனங்கள், நீதித்துறை மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றின் ஊக்கத்திலேயே தங்கியிருக்கிறது.

# மீன் வள மேலாண்மை...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்கை விளக்கு மீன்பிடி தொழில்நுட்பம், மீன்களை மட்டுமின்றி மீன் குஞ்சுகள் மற்றும் பிற கடல் வாழ் உயிரினங்களையும் ஈர்க்கிறது. அதிகமான மீன் பிடிப்புக்கு வழிவகுக்கும் இந்தத் தொழில்நுட்பம் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதுடன் பவளப்பாறை சிதைவுக்கும் வழிவகுத்து கடல் சூழலை மோசமாக்கும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

மதிப்பீடு அடிப்படையில் மீன்பிடி கட்டுப்பாடுகள் கொண்ட ஒதுக்கீடு மேலாண்மை அமைப்பு மற்றும் மீன்கள் இனப்பெருக்கம் செய்ய போதுமான நேரம் வழங்கும் அமைப்பு ஆகியவற்றை கொண்ட நியூசிலாந்தில், அரசுக்கும் மீனவ சமுதாயத்தினருக்கும் இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு உள்ளது. சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் அடிப்படையிலான மீன்வள மேலாண்மை மற்றும் செயற்கைக்கோள்வழி மீன்பிடி படகு கண்காணிப்பு கொண்ட நோர்வே நாட்டில் மீன்கூட்டம் உள்ள பகுதியில் மீன்பிடிக்க தற்காலிக தடை விதிக்கப்படுகிறது.

கடல்வள பாதுகாப்புச் சட்டமும், கடல்சார் பாதுகாக்கப்பட்ட உயிர்வளப் பகுதிகளையும் கொண்ட கனடா, பாரம்பரிய மீனவர்களின் உரிமையைப் பாதுகாத்து வருகிறது. மண்டல மீன்வள மேலாண்மை அதிகார அமைப்பு மற்றும் அனுமதிக்கப்பட்ட மீன்பிடி முறைகள் கண்காணிப்பு அமைப்பு கொண்ட ஆஸ்திரேலியா பிற கடல் வாழ் உயிரினங்கள் பிடிப்பதை தடுக்கும் வகையிலான திட்டங்களைக் கொண்டுள்ளது.

மாற்றத்தக்க தனிநபர் மீன்பிடி ஒதுக்கீடு மற்றும் குறைவான சட்டவிரோத மீன்பிடித்தல் கொண்ட ஐஸ்லாந்து நாடு வலுவான தரவு சேகரிப்பு அமைப்பைக் கொண்டு மீன்வள மேலாண்மையில் அறிவியல் ரீதியான முடிவுகளை எடுக்கிறது. சிறு மீனவர்களின் வாழ்வாதாரப் பாதிப்பு, கடல் உயிரினங்களின் சமநிலை சீர்குலைவு, நீடித்த மீன் வளர்ச்சிக்கான தடை போன்ற பாதிப்புகளைக் களையவதற்கு திறன் சார்ந்த மீன்வள மேலாண்மை, தொழில்நுட்பப் பயன்பாடு, மீன்பிடி ஒழுங்குமுறை, கடல் சூழல் பாதுகாப்பு ஆகியவை அவசியம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அறிவியல் அடிப்படையிலான மீன்பிடி நிர்வாகம், தொழில்நுட்பக் கண்காணிப்பு, மீனவர்கள் பங்கேற்பு, விதிகளை கடுமையாக அமல்படுத்துதல் ஆகியவை மீன் வளத்தை மேம்படுத்த உதவும். (தினமணி)

# மனிதம்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்டோவில் தவறவிட்ட நகையைக் கொண்டு கொடுக்கும் ஆட்டோ ஓட்டுநரும், குப்பையில் கண்டெடுக்கும் நகை, பணம் இவற்றை காவல் நிலையத்தில் ஒப்படைக்கும் தூய்மைப் பணியாளரும் இன்னும் இருக்கத் தான் செய்கிறார்கள். வறுமை அவர்களின் நேர்மைக் குணத்தை மாற்றவில்லை. மெத்தப்படித்த பெரும் பணக்காரர்களிடம் இல்லாத நேர்மை, உயரதிகாரிகள் பலரிடம் இல்லாத நேர்மை, ஏழைகளின் நெஞ்சில் குடிகொண்டிருக்கிறது.

ஆசிரியர்களில் ஒரு சிலரின் மோசமான நடத்தைகள் குறித்து, ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. எல்லா தொழில்களிலும், பணிகளிலும் மனம் திரிந்தவர்கள் உண்டு. ஆனால், உண்மையாகவும், அர்ப்பணிப்பு உணர்வோடும் பணிபுரியும் ஆசிரியர்கள் பல்லாயிரம் பேர் இருக்கிறார்கள்.

வாழ்வே வரம் என்று எண்ணி, அதை அனைத்து வகையிலும் செறிவும், நிறைவும் கொண்டதாக மாற்ற எண்ணும் மனிதர்கள் அதைக் கொண்டாட்டமாக ஆக்கிக் கொள்கிறார்கள். நம்மையும், நம்மைச் சுற்றி உள்ளவர்களையும் நீடிக்கும் ஆரோக்கியமான மகிழ்ச்சிக்கு உட்படுத்துவதிலையே வாழ்வின் சிறப்பும், பெருமையும் அடங்கியுள்ளது. எதைக் கொண்டு வந்தோம்? எதைக் கொண்டுபோகப் போகிறோம்? வாழ்வின் நிலையாமையைப் புரிந்து கொண்டு இந்தப் பூவுலகில் அன்பை விதைத்து அன்பை அறுவடை செய்வோம். அன்பு அரசாளட்டும்.

குறுக்கு வழியில் கோடியை சம்பாதிக்கிறான் பணம் மட்டுமே வாழ்க்கை என்று அதன் பின் ஓடி உண்மையான மகிழ்ச்சியைத் தொலைக்கிறான் மனிதன். தனக்கு மிஞ்சியதை தானம் செய்தால், ஏழ்மையும் ஏணிப்படி ஏறி உயர்ந்துவிடும்.

# தமிழ் மக்களுக்கு மாகாண ஆட்சி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் அபிலாசைகளில் அக்கறையுடைய புத்திஜீவிகள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களுடன் கலந்தாலோசனை நடத்தவிருப்பதாக கூறியிருக்கிறார்.

முதற்கட்டமாக பெருமாள் தனது முன்னாள் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) கடந்தவாரம் யாழ்பாணத்தில் கலந்தாலோசனை நடத்தினார்.

மாகாணசபைகளை பாதுகாக்க வேண்டும் என்பதிலும் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவரான பிரேமச்சந்திரனின் கட்சி தற்போது அங்கம் வகிக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய பேரவையுடன் செய்து கொண்ட ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து 13 வது திருத்தம் தொடர்பில் அவரது தற்போதைய நிலைப்பாடு குறித்து கேள்வி எழுந்தது.

அந்த உடன்படிக்கையில் '13 வது திருத்தம் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான முழுமையானதோ அல்லது இறுதியானதோ தீர்வு அல்ல' என்று கூறப்பட்டிருக்கிறது. சமஷ்டிமுறையின் அடிப்படையிலான தீர்வொன்றை நோக்கிய பயணத்தில் 13 வது திருத்தத்தையும் மாகாண சபை முறையையும் ஒரு இடைக்கால ஏற்பாடாகப் பயன்படுத்தவேண்டும் என்பது பெரும்பாலான தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாடாக இருந்துவரும் நிலையில், உடன்படிக்கையின் அந்த வாசகம் பலருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

ஆனால், வரதராஜப் பெருமாளை சந்தித்த பிறகு கடந்த வாரம் பிரேமச்சந்திரன் வெளியிட்ட அறிக்கை மாகாண சபைகள் தொடர்பான அவரின் நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியிருக்கிறது.

'தற்போதைய அரசாங்கத்தை பொறுத்தவரை, அடுத்த நான்கு வருடங்களில் எத்தகைய பிரச்சினையும் இல்லாமல் ஆட்சி செய்வதுதான் அதன் தலைவர்களின் சிந்தனையாக இருக்கிறது. சர்ச்சைகளை தோற்றுவிக்கக்கூடிய பிரச்சினைகளை கையாள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. இதை தமிழ் மக்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

'தமிழ்த் தரப்புகள் ஒன்றுபட்டு உறுதியான நெருக்குதலைக் கொடுக்காவிட்டால், மாகாணசபை தேர்தல்கள் கானல் நீராகவே இருக்கும். தற்போதைய ஆட்சியாளர்களும் அதிகாரப்பகிர்வில் விருப்பம் இல்லாதவர்களே.

'இத்தகைய சூழ்நிலையில், தமிழ் மக்கள் தங்களுக்கான அதிகாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமானால், மாகாணசபை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுடன் 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது அதிமுக்கியமானது.

'தமிழ் மக்களுக்கு குறைந்தபட்சம் கிடைத்திருக்கும் அதிகாரங்களை கையில் எடுப்பதன் மூலமாகவே வடக்கு, கிழக்கு பாதுகாக்கப்படும் என்பதுடன் இரு மாகாணங்களிலும் அரசாங்கம் மேற்கொள்ளும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை ஓரளவுக்காவது தடுத்து நிறுத்தமுடியும். அதிகாரங்கள் கையில் இல்லாத காரணத்தினால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக முன்னெடுக்கின்ற சகல நடவடிக்கைகளையும் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த மாகாணசபையும் 13வது திருத்தத்தின் மூலமான அதிகாரங்களும் மாத்திரமே தற்போது எம் கைவசம் இருக்கின்றன.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று காணப்படும் வரையில் மாகாணசபையின் அதிகாரங்களை பயன்படுத்திக்கொண்டு அடுத்த கட்டத்துக்கு நகருவதே புத்திசாலித்தனமானது.

இவை குறித்து கலந்தாலோசித்து ஒரு பொதுவான கருத்தொருமிப்பை காணவேண்டியதே இன்றைய கட்டத்தில் மிகவும் முக்கியமானது" என்று பிரேமச்சந்திரன் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வரதராஜப்பெருமாளின் முயற்சி தொடர்பில் மற்றைய தமிழ்க்கட்சிகள் எத்தகைய பிரதிபலிப்பை யும் இதுவரையில் வெளிக்காட்டவில்லை. அவர் தனது முயற்சி தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வமாக இன்னமும் அறிவிக்கவில்லை என்பது அதற்கு காரணமாக இருக்கலாம்.

தென்னிலங்கை மக்களை பொறுத்தவரை, மாகாண சபைகள் இயங்கினால்தான் அவர்களது தேவைகள் நிறைவேற்றப்படும் என்றில்லை. மத்திய அரசாங்கமே ஏழு மாகாணங்களிலும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும். ஆனால், வடக்கு, கிழக்கு மக்களை பொறுத்தவரை, மாகாண ஆட்சிமுறை அவர்களிடம் இருந்தால் மாத்திரமே ஓரளவுக்கேனும் மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாகவும் பிராந்தியத்தில் இடம்பெறுகின்ற அத்துமீறல்களை தடுக்கக்கூடியதாகவும் இருக்கும். அதனால் மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் மக்களிடம் இருந்து கிளம்ப வேண்டும்.

மாகாணசபைக்கும் 13 வது திருத்தத்துக்கும் எதிராக கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தமிழ் அரசியல்வாதிகள் பேசிவந்திருப்பதால் தமிழ் மக்களும் அவை பற்றி சரியான புரிதல் இல்லாமல் இருக்கிறார்கள். அதனால், மாகாண சபை ஆட்சிமுறை குறித்து தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வரதராஜப்பெருமாளின் முயற்சிகளுக்கு தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகமும் ஒத்துழைப்பு கொடுத்து தற்போதைக்கு நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளை கடைப்பிடிப்பதில் அக்கறை காட்ட வேண்டும்.

இந்த கட்டுரையாளர் 13 வது திருத்தத்தின் ஒரு இரசிகர் அல்ல. அதுவும் இல்லாத மக்கள் கூட்டமாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அவலப்படக்கூடாது என்பதே அக்கறையாகும்.

மாகாணசபை தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்பது மாத்திரமல்ல, மாகாண ஆளுநர்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பது வடக்கு, கிழக்கில் ஒரு வெகுஜனக் கோரிக்கையாக வெளிக்கிளம்ப வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதானி...

இருப்பினும், அடுத்த சில மாதங்களுக்குள் சட்டமா அதிபரின் ஆலோசனை மற்றும் அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு, திருப்பிச் செலுத்தும் தொகையின் சரியான தொகை தீர்மானிக்கப்படும்.

இந்த நிறுவனம் வடக்கு மாகாணத்தில் மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்தி நிலைய திட்டங்களை நிர்மாணிப்பதற்கு 442 மில்லியன் டொலர்களை முதலீடு செய்யுமெனவும் இந்தத் திட்டம் 2025 ஆம் ஆண்டுக்குள் தேசிய மின் கட்டமைப்பில் குறைந்தது 350 மெகாவாட் மின்சாரத்தை சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. (அ)

## வேலை...

அதன் காரணமாக தொழிற்சங்கத் தலைவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன், நீங்கள் வீதிக்கு இறங்கி வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் செய்துவிடுவதால் மாத்திரம் எல்லாவற்றையும் செய்துவிட முடியாது.

ஒருசில விடயங்கள் தொடர்பில் நாங்கள் அதனை மேற்கொள்ள திறைசேரியுடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டியிருக்கும்.

அதற்காக குறிப்பிட்ட காலம் எடுக்கும். எனவே வேலைநிறுத்தம் மேற்கொள்வதால் ஒருசதத்துக்கும் பிரயோசனம் இல்லை-என்றார். (அ)

## விசாரணை...

தவறான நடத்தை மற்றும் கடுமை யான அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப் பிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு அண்மையில் சாட்சியமளிப்புப் பணியை நிறைவு செய்தது.

உயர் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேன இந்தக் குழுவின் தலைவராக உள்ளதுடன் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி நீல் இத்தவால மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஈ.டபிள்யூ. எம். லலித் ஏக்கநாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். (அ)

## ஒரு வகுப்பறையில்...

தெரிவித்தார்.

புதிய கல்வி மறுசீரமைப்புகள் குறித்து மாகாண அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நான்காவது நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவித்தாவது-

கல்வி மறுசீரமைப்புக்காக நீங்கள் பெற்றுத்தரும் ஆதரவுக்கு நான் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையில், எமது அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே புதிய கல்வி மறுசீரமைப்பை மேற் கொள்வது பற்றி கலந்துரையாடப்பட்டு திட்டமிடப்பட்டது.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப நிபுணர்களுடன் கலந்துரையாடி, பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைப் பெற்றே, இந்தக் கொள்கைகள் வகுக்கப்பட்டன.

புதியக் கல்வி மறுசீரமைப்பில் பாடத்திட்டத்தினை மட்டுமின்றி, ஆசிரியர்களின் தொழில்சார் திறனை மேம்படுத்துதல், புதிய மறுசீரமைப்புக்கு ஏற்ப கல்வி நிர்வாக அமைப்பை மறு சீரமைத்தல், அனைத்து குழந்தைகளுக்கும் சமமான,தரமான கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இது எமது தனிப்பட்ட தேவைக்காகச் செய்யும் ஒன்றல்ல, நாட்டின் தேவையை உணர்ந்து, நாம் நிறைவேற்ற வேண்டிய ஒரு பொறுப்பாகும் என்ற உணர்வுடன் மேற்கொள்ளப்படும் ஒரு பணியாகும் - என்றார். (அ)

## ஜூலை 25வரை...

வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டளவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (அ)

## உள்ளக...

கூறினார்.

“வடக்கில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் . எனவே, செம்மணி போல மேலும் பல புதைகுழிகள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் இருக்கலாம்.” - எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டார்.

செம்மணிப் புதைகுழியில் அகழ்வுப் பணி இடம்பெற்றாலும், அது தொடர்பான விடயங்களும் மக்கள் புதைக்கப்பட்டதுபோல புதைக்கப்படலாம். 4 மற்றும் 5 வயதுடைய சிறார்களின் எலும்புக்கூடுகள்கூட மீட்கப்பட்டுள்ளன. இலங்கையில் தமிழ் மக்களை இராணுவத்தின் எப்படி கவனித்துள்ளனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். இதற்கு எதிராக பாரிய வெகுஜன போராட்டம் அவசியம்.

தமிழ் மக்களுக்கு உள்ளக பொறிமுறை ஊடாக ஒருபோதும் நீதி கிடைக்கப்போவதில்லை. 2009 பெற்றோரால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட மற்றும் ஆன்மீக தலைவர்களால் கையளிக்கப்பட்ட மக்களுக்கு என்ன நடந்துள்ளது என்பது 16 வருடங்கள் கடந்தும் தெரியவில்லை.

கண்முன்னே கையளிக்கப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியை பெற்றுக் கொடுக்க முடியாத வகையில்தான் தெற்கிலுள்ள சிங்கள அரசுகள் செயற்பட்டன.

அநுரகுமாரவின் ஆட்சிகூட தெற்கிலுள் அரசுதான். எனவே, இப்படியான ஆட்சியின்கீழ் உண்மை வெளிபடாது. நீதி கிடைக்காது. எனவே, சர்வதேச ஒத்துழைப்பு ஊடாகவே நீதியை பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே, சர்வதேச விசாரணையையே நாமும் வலியுறுத்துகின்றோம்.”-என சிறிதுங்க ஜயசூரிய மேலும் குறிப்பிட்டார். (அ)

## அரசாங்கத்தின்...

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர், நெடுந்தீவு பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்தார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ், ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்கள் தப்பவே முடியாது.

அதற்கமைய ஊழல்களில் ஈடுபட்ட மோசடியாளர்கள், தற்போது சட்டத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளனர். நாம் சட்ட விவகாரத்தில் தலை யிடவில்லை.

சட்டம் தனக்குரிய வகையில் தனது கடமையை நிறைவேற்றும்.மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிச்சயம், கட்டம், கட்டமாக நிறைவேற்றுவோம்.

இது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. என அமைச்சர் சந்திரசேகர் குறிப்பிட்டார். (அ)

## இனப்...

நாயக்கவுக்கு கொடுத்த அதே ஆத ரவை மக்கள் தற்போதைய அரசாங்கத் துக்கும் கொடுத்துள்ளனர்.

அந்த மக்களின் தேவைகளை புரிந்து கொண்டு அவற்றை நிறைவேற்றக்கூடிய நிலைமையில் இவர்கள் செயற்படுகின்றார்களா என்பது கேள்விக்குறியான ஒரு விடயமாகவே காணப்படுகின்றது .

மக்கள் கொடுத்த வாக்குகளுக்கு, இந்த அரசாங்கத்தின் மூலம் நியாயம் கிடைக்கவில்லை என்பதே என்னுடைய பார்வையாக இருக்கிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் அன்று சந்திரிகாவிற்கு கிடைத்தது, இன்று அந்த சந்தர்ப்பம் அநுரகுமார திசாநாயக்கவுக்கு கிடைத்துள்ளது.

ஆனால் அவர்கள் இருவருமே மக்களுடைய தேவைக்கு அவற்றை பயன்படுத்தவில்லை-என்றார். (அ)

# அர்ஜுன மகேந்திரனுக்கு சிங்கப்பூரில் உயர் பதவி!

கொழும்பு, ஜூலை 20

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், தற்போது சிங்கப்பூரில் உள்ள ஒரு முன் னணி முதலீட்டு நிறுவனத்தில் மூத்த பதவியில் இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



அவர் தற்போது சிங்கப்பூரில் உள்ள முன்னணி நிறுவனத்தில் பணிபுரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவர் அங்கு முதலீட்டு நிபுணராக பணிபுரிகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகளின்படி, அவர் சில நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் முதலீட்டு மேலாண்மை, நிதி வள மேலாண்மை, பங்குச் சந்தை மற்றும் பத்திர முதலீடுகளில் ஆலோசகராகப் பணியாற்றுவதாக கூறப்படுகிறது.

அவர் பணிபுரியும் நிறுவனம், 2016 இல் நிறுவப்பட்டது என்றும், இது சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங்கிலிருந்து இயங்குவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிறுவனம் தற்போது 7 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை நிர்வகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த நிறுவனத்தின் சேவையைப் பாராட்டி அவர் ஏற்கனவே பல சர்வதேச விருதுகளை வென்றுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை விட்டு விட்டு சிங்கப்பூருக்கு சென்ற அவரை பத்திர மோசடி தொடர்பான வழக்குகளை எதிர்கொள்ள அரசாங்கம் இலங்கைக்கு அழைத்து வர முயற்சித்தபோதிலும், சிங்கப்பூர் இதுவரை அவரை அனுப்ப மறுத்து வருவதாக இலங்கையின் அரசியல் வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது. (அ)

# ஜகத் விதானகே எம்.பியின் மகன் கைது!

கொழும்பு, ஜூலை 20

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகேவின் மகன் பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக ஒன்று சேர்க்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் வாகனம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார்.

அதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகேவின் மகன் மத்துகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகனத்தை சட்டவிரோதமாக ஒன்று சேர்த்ததாகவோ அல்லது வைத்திருந்ததாகவோ சந்தேகிக்கப்படுவது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளைத் தொடர்ந்து மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# இ.போ.ச. பேருந்து சேவையில் பெண் சாரதி , நடத்துநர்கள்!

கொழும்பு, ஜூலை 29

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையில் பெண் சாரதிகள் மற்றும் நடத்துநர்களை இணைத்துக்கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபையால் பெண் சாரதிகள் மற்றும் நடத்துனர்களை ஆட்சேர்ப்பு செய்வது நீண்ட வரலாற்றின் பின்னர் இடம்பெறும் ஒன்றாகும்.

இது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் துணை பொது மேலாளர் இந்திகா குலதிலக தெரிவித்துள்ளதாவது,

இலங்கை போக்குவரத்துச் சபை, பேருந்து சேவையில் 50 பெண் சாரதிகள், நடத்துநர் பதவிகள் உட்பட 750 சாரதி மற்றும் நடத்துநர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது.

அதன்படி, 425 சாரதிகள் மற்றும் 275 நடத்துநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளனர். இதில் தலா 50 ஆண் மற்றும் 25 பெண் நடத்துனர்கள் உள்ளனர்.

இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு பின்னர் அவர்களின் சேவைகள் நிரந்தரமாக்கப்படும்.

இந்த ஆட்சேர்ப்புகளின் முக்கிய நோக்கம் கிராமப்புற பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகும். அதன்படி பேருந்து சேவைக்கு விண்ணப்பிப்போர் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

சாரதி சேவைக்கு 21 வயது முதல் 45 வயதுடையவர்கள் கல்விப் பொதுச் சான்றிதழ் சாதாரண தரத் தேர்வில் கணிதம், தாய்மொழி உள்ளிட்ட ஆறு பாடங்களில் இரண்டு மதிப்பெண்களுடன், தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஐந்து அடி உயரம், நல்ல ஆரோக்கியம், மூன்று வருட நீட்டிப்புடன் கூடிய கனரக வாகன சாரதி உரிமம் ஆகியவை கூடுதல் தகுதிகளாகும்.

நடத்துநர் சேவைக்கு, 18 முதல் 45 வயது வரை நல்ல ஆரோக்கியம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை தவிர, மேற்கண்ட அனைத்து தகுதிகளும் பொருந்தும்.

இதற்கமைய விண்ணப்பிக்கும் பெண்களை கொழும்பு பெண்கள் பாடசாலை போக்குவரத்து பேருந்து சேவைகளுக்கு பணியமர்த்துவதே இதன் நோக்கம் என்று தெரிவித்துள்ளார். (அ)

## பொலிஸ்...

பணிப்புரையை அனுப்பியுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தின குண்டு வெடிப்புகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை, நிலந்த ஜெயவர்தன தனது கடமையை புறக்கணித்ததாகவும், குற்றவியல் குற்றத்தைச் செய்ததாகவும் பரிந்துரைத்திருந்தது. அதன்படி, அவர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு, அவர் செய்த குற்றச் செயலுக்காக வழக்குத் தொடரப் பட வேண்டும் என்று ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் கல்வி மறுசீரமைப்பை ஆதரிக்கிறது அநுர அரசாங்கம்

## இது கர்மவினை - சம்பிக்க சாடல்



கொழும்பு, ஜூலை 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்தை கடுமையாக எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்ட தரப்பினர் தற்போது அந்த மறுசீரமைப்பு திட்டத்தை செயல்படுத்த முனைகின்றனர். இதனையே கர்மவினை என்பார்கள். நடைமுறைக்கு சாத்தியமான வகையில் கல்வி முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய கல்வி சீர்திருத்தத்தை அமுல்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இதற்கு பல்வேறு தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் 2019 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் மறுசீரமைப்பு பணிகளுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் அதனை செயல்படுத்த முடியவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டாண்டு கால பதவியில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நவீன தொழில் உலகை கருத்தில் கொண்டு கல்வி மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் குழுவை நியமித்து மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்த கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தற்போதைய கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும், தொழில் பிரதி அமைச்சர் மகிந்த சமரசிங்க ஆசிரியர்களையும் தூண்டிவிட்டு போராட்டத்தை தோற்றுவித்தார்கள். இதனால் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட கல்வி மறுசீரமைப்பு பணிகளை இந்த அரசாங்கம் எந்தவித மாற்றமுமில்லாமல் செயல்படுத்த தீர்மானித்துள்ளது.

இதனையே கர்மவினை என்று குறிப்பிட வேண்டும். சிறந்த விடயங்களை செயல்படுத்துவதற்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். நடைமுறைக்கு சாத்தியமான வகையில் கல்வி முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும்"- என்றார். (எ)

# மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் அதிகாரிகள் செயல்பட வேண்டும்

## உயர்நீதிமன்ற நீதியரசர் யசந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

ஊழலுக்கு எதிரான சகல செயல்பாடுகளுக்கும் அரச அதிகாரிகள் சுயாதீனமான முறையில் ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் அரச சேவையாளர்கள் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துடன் மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும் என உயர் நீதிமன்ற நீதியரசர் யசந்த கோடகொட தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணையில் பங்குபற்றுவதற்கு எனக்கும் வாய்ப்பு கிடைத்தது. எமக்கு பாரதூரமான சிக்கல் காணப்பட்டது. எந்த அடிப்படையில் மற்றும் முறைமையின் பிரகாரம் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதில் பாரிய சிக்கல் நிலை காணப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் பிரதிவாதியான அரச தரப்பு சார்பில் முன்வைக்கப்பட்ட சத்தியப்பிரமாண பத்திரத்தில் எமக்கு போதுமான தெளிவு கிடைக்கப்பெறவில்லை. இதனால் நாங்கள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், இந்த பொதுமன்னிப்புக்குரிய ஆவணங்களை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பெற்றுக்கொண்டோம்.

இந்த ஆவணங்களை பரிசீலனை செய்து எந்த அடிப்படையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை நாங்கள் விளங்கிக் கொண்டோம். உதய ஆர். செனவிரத்ன பகிரங்கமாக இவ்விடயம் பற்றி பேசுவதற்கு தயாராக இருப்பதை தெரிந்திருந்தால் அவரை ஒரு சாட்சியாக அழைத்திருக்க முடியும்.

இந்த ஜனாதிபதி பொதுமன்னிப்பு தொடர்பில் உதய ஆர். செனவிரத்ன மற்றும் மேலதிக செயலாளர் (சட்டம்) சரியான மற்றும் விரிவான குறிப்பை இட்டுள்ளார்கள். ஆகவே அரச அதிகாரிகள் என்ற அடிப்படையில் அவர்கள் தமது பொறுப்பை நிறைவேற்றியுள்ளார்கள்.

அரச அதிகாரிகள் தமது கடமையை செயல்படுத்தும் போது ஊழலுக்கு தாம் பொறுப்புதாரியாகாத வகையில் செயல்படுதல் வேண்டும். அவ்வாறு செயல்படுவது பல்வேறு நெருக்கடிகளில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு அவசியமானதாக அமையும்.

ஊழலுக்கு எதிரான சகல செயல்பாடுகளுக்கும் அரச அதிகாரிகள் சுயாதீனமான முறையில் ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் அரச சேவையாளர்கள் தமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்துடன் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும்" -என்றார். (எ)

# முன்னாள் அமைச்சர் சந்திராணிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 20

முன்னாள் அமைச்சர் சந்திராணி பண்டாரவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தொடர்ந்த வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சஹான் மாபா பண்டார முன் அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது பிரதிவாதி கோரிய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காக வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்குமாறு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு 11 குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதி யில், முறையான நடைமுறையைப் பின்பற்றாமல், எச்.எம். சந்திரவன்ச என்ற நபரை உலர் மண்டல அபிவிருத்தி அமைச்சின் திட்ட பணிப்பாளர் பதவிக்கு நியமித்தல் மற்றும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து தனது நண்பர்கள் குழுவை சட்டவிரோதமாக பல்வேறு பதவிகளுக்கு நியமித்ததன் மூலம் ஊழல் குற்றத்தைச் செய்ததாகக் கூறி, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு இந்த குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்துள்ளது.


இந்த வழக்கில் 08 நபர்கள் சாட்சிகளாகப் பெயரிடப்பட்டுள்ளதுடன், 25 ஆவணங்கள் வழக்குப் பொருட்களாக வழக்குடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(எ)

ஈழநாடு

இன்னொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம்

# யாழில் சமவுரிமை இயக்கம் கையெழுத்துப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 20

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாது செய்யக் கோரி நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் அடையாள கையெழுத்துப் போராட்டம் நேற்று யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது.

சம உரிமை இயக்கம் என்ற அமைப்பினரால் குறித்த போராட்டம் யாழ். மத்திய பேருந்து நிலைய பகுதியில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

இன்னொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்,

காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதாவது நீதி வழங்கு, அனைத்து தேசிய இனத்தவருக்கும் சம உரிமைகளை உறுதிசெய்யும் புதிய அரசமைப்புக்காக போராடுவோம் போன்ற விடயங்களை வலியுறுத்தி இந்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# விமான நிலையங்களுக்கு அருகில் பட்டம் பறக்க விடுவதற்குத் தடை

கொழும்பு, ஜூலை 20

கட்டுநாயக்க விமான நிலையப் பகுதிக்குள் பட்டம் பறக்கவிடுவதைத் தவிர்க்குமாறு விமான நிலைய முகாமைத்துவ பிரிவின் பிரதானி அருண ராஜபக்ஷ பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த அறிவித்தலைப் புறக்கணிப்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

"விமான நிலையத்தைச் சுற்றி பட்டம் பறப்பது விமானங்களுக்கும் பயணிகளின் உயிருக்கும் கடுமையான ஆபத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, விமான நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பட்டம் விடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், 300 அடி உயரத்துக்கு மேல் பட்டம் பறக்க விடப்பட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்." - என்றார். (எ)

# இஸ்ரேலில் இலங்கையர்களை ஏற்றிச்சென்ற பஸ் தீக்கிரை!

டெல் அவிவ், ஜூலை 20

இஸ்ரேலில் விவசாய தொழிலுக்காக வழக்கமாக இலங்கை இளைஞர்களை ஏற்றிச் செல்லும் பேருந்து தீப்பிடித்து எரிந்ததாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இந்த தீ விபத்தில் பேருந்து முற்றிலுமாக தீக்கிரையானது.

நேற்று முன்தினம் காலை விவசாய நடவடிக்கைகளுக்காக சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது. விபத்து இடம்பெற்போது பேருந்தில் 20 இலங்கையர்கள் பயணித்துள்ளனர்.

தீப்பிடித்த பிறகு பேருந்தின் கதவுகள் மூடப்பட்டிருந்ததால், அவர்கள் அனைவரும் ஜன்னல்களை உடைத்து வெளியேறினர்.

விபத்தில் ஒருவரது காலில் காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், எனினும் அவரது நிலைமை மோசமாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியான போதிலும், காயமடைந்த இளைஞனின் நிலைமை மோசமாக இல்லை என நிமல் பண்டார குறிப்பிட்டார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org